Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 04 | புதன்கிழமை (20.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 294


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/797)



தேசிய ரீதியில் முதலிடம்
14



ஆலயத்தில் உயிர்ப்பலிக்கு வருகிறது தடை
05



குளறுப்படி என்றால் பதவி துறப்பேன்
08



புதிய பஸ் சேவை
04

# மக்களை அழியவிட்டு ஓடிப்போனவர்கள்

## கூட்டமைப்புக்கு ரிஷாட் சாட்டை



(சாவகச்சேரி)

யுத்தம் தீவிரமடைந்தபோது தமது பிள்ளைகளையும், குடும்பத்தையும் வெளிநாடுகளில் பாதுகாப்பாகத் தங்கவைத்துவிட்டு, இன்று, நடைபெற்ற யுத்தம் தொடர்பாகவும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களையும் கூறி தாம் தான் தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று காட்டிக்கொள்ள முற்படுகின்றார்கள்.

ஆனால் உண்மை அதுவல்ல. தமிழ் மக்களின் அழிவுக்கு மூலகாரணமாக இருந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான். இதை யுத்தப் பாதிப்பிற்குள்ளான மக்கள் இன்று உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக, ஒற்றுமையைச் சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டவும், உரிமைகளை வென்றெடுப்பதற்கும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எமக்கு வாக்களிக்கவேண்டும் என்று கோரி வருவதெல்லாம் வெறும் பொய்யான பேச்சாகவே இருந்து வருகிறது. வீர வசனங்கள் பேசி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிக்கும் கூட்டமைப்பினர், தேர்தலில் வெற்றி பெற்றதும் இந்த மண்ணில் காணமுடியாது.

கூட்டமைப்பினர் தங்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் பின்கதவால் வந்து செய்து கொண்டுபோகிறார்கள். இது அவர்களது சுயநலப் போக்கைக் காட்டுகிறது.


இறுதிக்கட்ட யுத்தத்தின் போது உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி ஓடிவந்த தமிழ் மக்களுக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## பின்வாங்கப் போவதில்லை மாவை சேனாதிராசா சூளுரை

(யாழ்ப்பாணம்)

இந்தத் தேர்தலில் இருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சூளுரைத்துள்ளார். சுன்னாகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசுகையில், தேர்தலில் இருந்து விலக நேரிடும் என்று நேற்றுமுன்தினம் அறிக்கை விட்டிருந்த மற்றொரு கூட்டமைப்பு எம்.பியான எம்.கே.சிவாஜிலிங்கத்தைக் காட்டமாகக் கண்டித்தார். கூட்டமைப்பு, தேர்தலில் இருந்து விலகும் என்று அறிக்கை வெளியிடுகின்ற அதிகாரம் சிவாஜிலிங்கத்திற்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கடந்த காலத்தின் சுயலாப அரசியல் தலைமையை விலக்கி முன்செல்வோம்



(யாழ்ப்பாணம்)

எங்களது கடந்தகால அரசியல தலைமை சுயலாப அரசியலையே முன்னிறுத்திச் செல்கிறது. மக்களுக்குக் கிடைக்கவேண்டியவற்றையெல்லாம் கிடைக்காது செய்துவிட்டார்கள். அவர்களது பேச்சுகள் செயல்கள் எல்லாம் தங்களது ஆசனங்கள், வாக்குகள் என்பனவற்றை அதிகரிப்பதற்கும் பாதுகாப்பதற்குமாகத்தான் இருந்ததே தவிர மக்கள் நலன் சார்ந்ததாக இருக்கவில்லை. இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் முன்பாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சகோதரத்துவ மற்றும் அரசியல் ரீதியான பரஸ்பர புரிந்துணர்வு ஒன்று இருப்பதாகவும், அந்த வகையில் தமது கோரிக்கைகள் அனைத்தையும் மக்கள் நலன் சார்ந்ததாக கருத்திலெடுத்து எதற்கும் மறுப்புச்சொல்லாமல் (15 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் மனிதன் அல்ல என்ற அண்ணனுக்குத் தம்பியின் பதில்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதனேயல்ல உண்மையில் அவர் வடமாகாண மக்களின் கடவுளாக இருக்கின்றார் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர்களை ஆதரித்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்கள் அதிகமாக அழிய விடிவு வரும் என்றவர்கள் கூட்டமைப்பினர்

தமிழ் மக்கள் அழிந்தது போதாது. இன்னும் எந்தளவிற்கு அழிவுகள் அதிகமாக நடக்கின்றதோ அந்தளவிற்கு விரைவாக எமக்கு விடிவு கிடைக்கும் என்று புலம்பெயர் மக்களிடம் கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே இன்று எமது மக்களின் அழிவுகளை வைத்து அரசியல் வியாபாரம் நடத்தி வருகிறார்கள் என்று ஈ.பி.டி.பி.யின் சர்வதேச தகவல் தொடர்புச் செயலாளர் விந்தன் தெரிவித்தார். கோப்பாய் நாவலர் வித்தியாசாலை முன்பாக நிகழ்ந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

அழிவுகள் நடந்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இப்போது நீலிக் கண்ணீர் வடித்து வருகிறார்கள். ஆனால் அந்த (15 ஆம் பக்கம் பார்க்க)



நமது பிரதேசம் விசேட கவனம் பெற

ஈ.பி.டி.பி.க்கு வாக்களிப்போம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# மாகாண மட்டப் போட்டியில் மல்லாவி மாணவி வெற்றி

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி மாணவி ஒருவர் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் 3 விளையாட்டுக்களில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

19 வயது கீழ் பெண்கள் பிரிவில் விக்னேஸ்வரன் டிலக்சனா என்ற மாணவி 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஆகிய 3 பிரிவுப் போட்டிகளிலும் மாகாண மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (121)

# அரியாலையில் அபிவிருத்திப் பணி இன்று முதல் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் அரியாலைப் பகுதியில் இன்று பல்வேறு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அரியாலை நாவலடிப் பகுதியில் யுத்தத்தால் சிதைவடைந்து மீண்டும் 30 இலட்சம் ரூபா செலவில் சமுர்த்தி செயலணியால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சுகாதார வைத்திய நிலையம் மக்கள் பாவணைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

யுத்தத்தால் கடும் சேதமடைந்த இப்பகுதி, கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்து, அண்மைக் காலத்திலேயே அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக இப்பகுதியில் மக்கள் மீள் குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சுகாதாரம், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்படாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில், யாழ்.வருகை தந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கவனத்திற்கு இவ் விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்து உடனடியாக 300 மலசல கூடங்கள் இலவசமாக மக்களுக்கு அமைத்துக் கொடுக்க அனுமதி வழங்கியுள் ளார்.

இவ்மலசல கூடங்கள் இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ள அதேவேளை, மக்களின் சுய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் 'திவிநெகும' செயற்திட்டத்தின் கீழ், 75 பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகளும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில், அமைச்சர்கள், பிரமுகர்கள், அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (26)

# சிறுமிக்கு தீக்காயம்

விளையாடச் சென்ற போது பக்கத்து வீட்டுக் காணியில் காணப்பட்ட நெருப்புச் சாம்பலுக்குள் கால்களை வைத்ததினால் இரண்டு கால்களும் வெதும்பிய சம்பவம் வசந்தபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் க.சினேகா (வயது-6) என்பவரே இரண்டு கால்களும் வெதும்பிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

பாடசாலை முடித்து வீட்டிற்கு வந்த சிறுமி விளையாடுவதற்காக பக்கத்து வீட்டுக் காணிக்குச் சென்றார். அங்கே குப்பை கொழுத்திவிட்டுச் சாம்பல் படிந்த நிலையில் காணப்பட்டது. இதனை அறிந்திராத சிறுமி தவறுதலாக நிலத்தில் கால்களை வைத்தபோதே மேற்படி சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது. (எஸ்)

# விவசாயிகள் தினம்; வவுனியாவில் ஏற்பாடு

வவுனியாவில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தேசிய விவசாயிகள் தினத்தை முன்னிட்டு அது தொடர்பான ஏற்பாடுகளை கவனிக்கும் பொருட்டு நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா வந்திருந்த விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபயவர்த்தனா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர் மட்ட மகாநாட்டில் கலந்து கொண்டார்.

இந்த விவசாயிகள் தின வைபவத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.

விழா தொடர்பான ஏற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சருக்கு விளக்கமளித்தனர்.

மேலும், அமைச்சரும், குழுவினரும் விழா நடைபெறும் தாண்டிக்குளம் அரசினர் பண்ணை, விவசாயகல்லூரிக்கும் விஜயம் செய்திருந்தனர். அமைச்சர் முக்கியமான ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு வழங்கினார்.

விவசாயிகள் தின விழாவை முன்னிட்டுப் பல்வேறு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (39)

## பொதுக்கூட்டம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் நாளை வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பழனி பஞ்சலிங்கம் தலைமையில் ஆலய திருக்கல்யாண மணிமண்டபத்தில் இடம்பெறும். எனவே அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

# மாணவர் கௌரவிப்பு

துணுக்காய் கல்வி வலயத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் மற்றும் 3ஆம் இடங்களைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை தண்டுவான் அரசினர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், 11வயது பிரிவு ஆக்கத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலய மாணவியான எதின்தியா பிறேமநாத் மற்றும் மேற்பிரிவில் இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் 3ஆம் இடம் பெற்ற மல்லாவி மத்திய கல்லூரி மாணவனான க.ஜனார்த்தன் ஆகிய மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். (121)

## ப.நோ.கூ.சங்கக் கிளை மீண்டும் இயங்குகிறது

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நவாலிக் கிளை 7 மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேற்படி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நிலைமை மோசமடைந்ததினால் மேற்படிக் கிளை சில காலம் மூடப்பட்டிருந்தது.

எனினும், தற்போது சங்கம் ஓரளவு வருவாயை ஈட்டிவரும் நிலையில் மக்களின் நன்மை கருதி மீண்டும் இக்கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## அதிபர்களுக்கான கூட்டம்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று முல்லைத்தீவு தண்டுவான் பாடசாலையில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கே. விஜயபாலா அறிவித்துள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு மேறபடி வலயப் பாடசாலை அதிபர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (121)

# மரத்திலிருந்து விழுந்தவர் காயம்

(முல்லைத்தீவு)

தேக்க மரம் வெட்டுவதற்காக ஏறிய இளைஞன் கால் தவறிக் கீழே விழுந்து கை எலும்பு முறிந்து படுகாயங்களுக்குள்ளான சம்பவம் முள்ளியவளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தே.ரமேஸ் (வயது-24) என்பவரே படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

## தீயில் எரிந்து இளம்பெண் மரணம்

(கிளிநொச்சி)

குடும்பத் தகராறு காரணமாகத் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டி மரணமடைந்த நிலையில் இளம் பெண்ணின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாகத தற்கொலை செய்துகொண்ட செய்தியைக் கேட்டவுடன், கணவன் தலைமறைவாகிவிட்டார் எனவும், அப்பெண்ணின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

அண்மைக்காலமாக குடாநாட்டில் இவ்வாறான தற்கொலை முயற்சிகள் இடம்பெற்றுவது குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## மாதாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் 2011ஆம் ஆண்டுகான ஏழாவது மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மாநகர முதல்வரின் அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


# சமுர்த்திப் பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 'திவிநெகும' சமுர்த்திப் பயனாளிகளுக்கான விவசாய உள்ளீடுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சமுர்த்தி வங்கிச் சங்க வலயங்களில் வைத்து வழங்கப்பட்டது.

இந்தநிகழ்வில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேசப் பொறுப்பாளர் அலெக்ஸ் சாண்டர் (சாள்ஸ) பயனாளிகளுக்கான விவசாய உள்ளீடுகளை வழங்கி வைத்தார்.

இவ்வைபவத்தில், தென்மராட்சி நகரசபை வேட்பாளர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், அலுவலகர்கள் உட்படப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (19)



வண்ணை கலட்டி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 15 நாட்கள் இடம் பெறும் திருவிழாவில் ஆகஸ்ட் 1ஆம் திகதி தேர்த்திருவிழா இடம்பெறும். கொடியேற்றத் திருவிழாவின் போது சுவாமி வெளி வீதியுலா வரும் காட்சியைக் காணலாம்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை கசூரினா கடற்கரையில் அசெம்பிளி ஒவ் கோட் கோண்டாவில் திருச்சபைப் போதகர் க.ராஜா மற்றும் வண.சிதம்பரப்பிள்ளை ஆகியோர் இணைந்து விசுவாசி ஒருவருக்கு திருமுழுக்கு வழங்குவதைக் காணலாம்.

எதையாவது அறிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டால் தனியான இடத்தில் தங்கிக் கண்ணீர் மல்க இறைவனை வேண்டுங்கள் அவன் உங்கள் மனத்திலுள்ள அழுக்கையும், துயரத்தையும் போக்கு வான்.

- சாரதா தேவியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## இறந்தோரையும் விற்கும் எத்தர்கள்!

இறுதி யுத்தத்தில், புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து தாங்களாக விரும்பி வெளியேறுகின்ற மக்களை வெளியேற அனுமதிக்க வேண்டுமென, தான் மட்டுமே கூறியதாகவும், ஏனைய 21 கூட்டமைப்பு எம்பிக்களும் அப்படிச் சொல்ல வேண் டாம் என்று தன்னைக் கண்டித்திருந்ததாகவும் வன்னி மாவட்ட கூட்டமைப்பு எம்பி வினோகராதலிங்கம் வெளிநாடொன்றில் கூறியிருந்தார்.

இல்லாவிட்டாலும் கூட, மக்களின் வாக்குகளைக் கேட்டு எம்பிக்களாகியிருந்த கூட்டமைப்பினர் எவரும், மக்களைக் காப் பாற்றியிருக்கக்கூடிய எந்தவொரு வசனத்தையும் அந்தக் கால கட்டத்தில் பேசாது கள்ளமௌனம் காத்தார்கள் என்பது எல் லோருக்கும் தெரிந்ததே.

மக்களைத்தான் அப்படிக் கைவிட்டார்கள் என்றால், தங்களை எம்பிக்களாக்கிவிட்ட புலிகளையும், அழிந்து போகட்டும் என்றே தான் இவர்கள் விரும்பியிருந்தார்கள் என்பது ஒன்றும் இரகசி யச் செய்தியல்ல. இறுதிவரை புலிகளுடனிருந்து கடைசிக் கட்டத்தில் தப்பி வந்த புலி உறுப்பினர்கள் சொல்லும் கதைகள் மிக அதிர்ச்சி தருபவையாக இருக்கின்றன.

புலிகள் கடைசிக் கட்டத்தில், தாங்கள் பாராளுமன்றம் அனுப்பி வைத்த உறுப்பினர்களைப் பெரிதும் எதிர்பார்த்திருக்கிறார்கள். கொழும்பிலும், இந்தியாவிலும், சர்வதேசத்திலும் இவர்கள் தங்களைக் காப்பாற்றப் பேசுவார்கள் என்று காத்திருக்கிறார் கள், தொடர்பு கொள்ளத் தொலைபேசியில் தேடியிருக்கிறார்கள்.

ஆனால் இவர்களோ அந்நேரம் தங்கள் கைத்தொலைபேசி களையும் மூடி வைத்துவிட்டுக் கமுக்கமாயிருந்தார்கள் என்று குமுறிச் சொன்னார் அந்த முன்னாள் புலி உறுப்பினர்.

குறிப்பாக மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை புலிகள் பலமுறை தொடர்புகொள்ள முயற்சித்தபோதும், இவர்கள் தங்களை ஒளித் துக் கொண்டார்கள். புலிகள் அழிந்து விடுவதுதான் நல்லது என்று அவர்களைக் கைவிட்டு ஓடி ஒளிந்து கொண்டவர்கள், இப்போது தேர்தல் வாக்குகளுக்காக, இறந்த மக்களையும் புலி களையும்சொல்லிச் சொல்லி முதலைக் கண்ணீர் வடிக்கிறார் கள் என்று கசப்புடன் சொன்னார் அவர்.

'அபிவிருத்தியைக் கேளாதே,' நிவாரணங்களை வாங்காதே' என்று மக்களுக்கு ரோசப் பேச்சுக்கள் மூலம் போதையேற்றி விட்டு, அந்த மயக்கத்தில் வறுமைச் சுமைகளோடு வாழச் சொல்கிறார்கள். தங்களது குறுகிய அரசியல் லாபங்களுக்காக மக்களை வறுமையில் வாட விடுவது மட்டுமல்ல, அவர்களது துன்பங்களை விற்றுத் தாங்கள் பிழைக்கிறார்கள்.

வன்னியில் கடைசி நேரம் மக்களும் புலிகளும் சாவதை ஊக்குவித்து மௌனமாக இருந்தவர்கள், இப்போது அவர்களது உரித்துக்காரர் தாங்கள்தான் என்பது போல இறந்தவர்களை யும் விற்றுத் தங்கள் பிழைப்புக்கு வழிதேடுகிறார்கள் என்று கோபப்பட்டுச் சொன்னார் அந்த இளைஞர்.

அதுமட்டுமல்லாமல், புலிகளும் மக்களும் ஒருபுறம் செத்துக் கொண்டிருக்க, அவசர அவசரமாகத் தங்கள் பஜிரோ வாகனங் களை விற்றுக் காசாக்கிக் கொண்ட – புலிகள் நியமித்த கூட்ட மைப்பு எம்பிக்களின் – பண 'வறுகல்' மகாத்மியங்களையும் விவ ரித்தார். மற்றும் சில கூட்டமைப்பு எம்பிக்கள் 'ரோ' அமைப்பின் கையாட்களாகப் பார்க்கப்பட்டுப் புலிகளால் தூர வைக்கப்பட்டவர் கள். இன்னும் சிலர், புலிகள் புதுமாத்தளனில் சுற்றிவளைக் கப்பட்ட நிலையில், அவர்களை மீட்க அரசாங்கத்தோடு பேசுவ தாகக் 'கயிறு' கொடுத்துவிட்டுக் காணாமலே போனவர்கள்.

இத்தகைய நம்பிக்கைத் துரோகங்களைச் செய்தவர்களும், புலிகளினதும் மக்களினதும் சாவை வேடிக்கை பார்த்தபடி கள்ளமாக மறைந்து நின்றவர்களுமான இந்த கூட்டமைப்பு எம்பிக்கள், இன்று மேடைகளில், புலிகளுக்கும் மக்களுக்கும் தாங்கள்தான் உரித்துக்காரர்கள் என்பது போல நீலிக்கண் ணீர் வடிக்கிறார்கள். அதற்கான பழிவாங்கல் போராட்டத்தைத் தாங்களே நடத்திக் கொண்டிருப்பது போன்ற பாவனையில் வீர வசனங்கள் பேசி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இறந்த மக்களின் பெயரால் இவர்கள் வாக்குக் கேட்கிறார் களாம்! இறந்த மக்களுக்கோ, இருக்கின்ற மக்களுக்கோ இவர் கள் செய்ததென்ன, செய்து கொண்டிருப்பதென்ன என்பதை யெல்லாம் அரச எதிர்ப்புக் கோஷத்தில் மறைத்து ஏமாற்றி விட லாம் என்பதே இவர்களின் தந்திரம்!

போரில் சிக்கிய மக்களையோ, இப்போது இருக்கும் மக்க ளையோ காக்கின்ற – வாழவைக்கும் வழிகள் ஏதுமில்லாத தங்களது அரசியல் வங்குரோத்தை, அரச எதிர்ப்பு வசனங் களால் மறைத்து வருகிறார்கள், அவ்வளவுதான்!

- ஆசிரியர்

# மீள்குடியமர்ந்த கற்சிலைமடு மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கவில்லையென விசனம்

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்கு வீட்டுத் திட்டவசதிகள் எவையும் இதுவரை வழங்கப் படாமையால் தாம் பல கஷ்டங் களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பல பகுதி களில் வீட்டுத்திட்டவசதிகள் வழங்கப்பட்டுள்ளநிலையில் தாம் மீளக்குடியமர்ந்து 1/2 வரு டங்களாகியும் இதுவரை எந்த நிறுவனங்களும் வீட்டுத்திட்ட வசதிகளை செய்து தரவில்லை என கற்சிலைமடு பிரதேச மக் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பிரதேசத்திலுள்ள மக்கள் நிரந்தர வீட்டு வசதிகள் இல்லா மல் தற்காலிக கொட்டகைகளின் கீழ் பெரும் சிரமத்தின் மத்தியில் நாளாந்தம் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இந்திய வீட்டுத்திட்டத்தி லாவது நிரந்தர வீட்டுத்திட் டத்தை பெற்றுத்தருமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (101)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கண்டவாளை கோட்ட பாடசாலைகளுக்கான பரிசளிப்பு விழா நேற்றுமுன் தினம் பிற்பகல் 1 மணிக்கு நடை பெற்றது.

கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தியாலய மண்டபத்தில் கண்டாவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் கிளிநொச்சி வலயகல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

மாணவர்களுக்கான பரிசில் களை திருமதி சித்ரா குருகுல ராஜா வழங்கினார்.

இந்நிகழ்வில் கண்டவாளை கோட்ட பாடசாலைகளின் அதி பர்கள் ஆசிரியர்கள் மாணவர் கள் எனப்பலர் கலந்து கொண் டனர். (121)

## விபத்துக்களைக் கட்டுப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வாகன விபததுக்கள் அதி கரித்து செல்வதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் எம்.கே.இலங்கக்கோன் போக்கு வரத்து பொலிஸ் தலைமை யகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் பிரதான வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸாரின் நடமாடும் சேவையை 24மணித் தியாலங்களும் முன்னெடுப் பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பிலி ருந்து மாத்தறை, கண்டி, குரு நாகல், புத்தளம், இரத்தினபுரி, உள்ளிட்ட பிராதான வீதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது.

குறித்த வீதிகளில் அதிவே கத்தில் வாகனம் ஓட்டுதல், மது போதையில் வாகனம் செலுத்து தல்,விபத்தை ஏற்படுத்தும் வகை யில் பயணித்தல், உள்ளிட்ட போக்குவரத்து சட்டங்களை மீறும் நடவடிக்கைகளை மேற் கொள்ளும் சாரதிகளுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படுமென பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தத் திட்டத்தினை செயற் படுத்துவது தொடர்பில் போக்கு வரத்து பொலிஸ் தலைமை யகத்தின்

பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் கே.ஏ.அரசரத் தினத்திற்கு அனைத்து ஆலோ சனைகளும் வழங்கப்பட்டுள்ளன

## வெப்பத்துடன் கூடிய காற்று; கண்நோய் தாக்கம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவி வரும் தற்போதைய கடும் வெப் பம் காற்றினால் கண்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்த கண்நோயினால் பாதிக் கப்படும் மக்கள் பிரதேச வைத் தியசாலைகளிலும் தனியார் சிகிச்சை நிலையங்களுக்கும் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதை காலநிலை வேறு பாட்டினாலும் கடுமையான வறட்சி வெப்பம் போன்றவர் இந்த கண்நோய் ஏற்படக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (வி)

# உலகின் மிகப் பெரிய ஒட்டுண்ணி இலங்கையரின் உடலில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் டெங்கு மற் றும் மர்மமான வைரஸ் நோய் கள் பரவி வரும் நிலையில், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மனிதனின் உடம்பில் வாழும் மிகப்பெரிய ஒட்டுண்ணியொன் றை ஓர் இலங்கையரில் அடை யாளம் கண்டுள்ளது.

“பலன்ரிடியம் கொலி” எனப் படும் இந்தப் பாரிய ஒட்டுண் ணியானது முன்னொருபோதும் இலங்கையரில் கண்டறியப்பட வில்லையெனவும் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் தலை வர் சகரிக சமரசிங்க தெரிவத் துள்ளார்.

இந்த ஒட்டுண்ணி பன்றி களின் பெருங்குடலிலேயே வாழ்கின்றது. இது உலகின் மிகப்பெரிய புறட்டோஸோ ஒட்டுண்ணியாகும். பன்றிகளின் மலத்தில் காணப்படுகின்ற இந்த ஒட்டுண்ணி,மாசடைந்த நீர் வழி யாக மனித உடலில் நுழைகிற தெனவும் அவர் கூறினார்.

தேசிய வைத்தியசாலையில் நோயாளியொருவரின் மலம் பரிசோதனை செய்யப்பட்ட போது இந்த ஒட்டுண்ணி கண் டறியப்பட்டது. இந்த ஒட்டுண்ணி தொற்குள்ளாகியவர்க்கு தோல் நோய் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றன காணப்படுகின்றன வெனவும் சகரிக சமரசிங்க குறிப்பிட்டார்.

இந்த ஒட்டுண்ணி மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவிய லாளரான துஷாரா தந்திரகே என்பவரால் அடையாளம் காணப்பட்டது.

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

காகில்ஸ் நிறுவனத்தின் 163ஆவது கிளை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி ஏ-9 வீதி கரடிபோக்குச் சந்திக்கு அரு காமையில் திறந்து வைக்கப்பட வுள்ளது.

# கொழும்புத்துறை - சுண்டுக்குளி பலத்தசேதம் மாற்றுவலுவுள்ளோர் தடுக்கிவிழும் நிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்புத்துறை சுண்டுக்குளி வீதி பலத்த சேதமடைந்துள்ளதால் இவ்வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் தாம் பெரும் அசௌகரியங்களுக் குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களாக திருத்தப் படாமல் இருக்கும் இவ்வீதி தார்கற்கள் கிளம்பிய நிலையில் வெறும் மண் தரையே காணப்படுவதாகவும் இதனால் இதனூடாக வாகனப் போக்குவரத்துக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்றுவருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதைவிட மேற்படி வீதிப்பகுதியில் ஜெய்ப்பூர் நிறுவனம் அமைந்துள்ளதால் இங்கு வசிக்கும் மாற்றுவலுவுடையோர் நாளாந்தம் இவ்வீதி யையே நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சேதடைந்துள்ள இவ்வீதி யால் தாம் சிரமங்களுடனே தாம் பயணம் செய்வ தாகவும் சிலவேளைகளில் தடக்கி விழும். அவல நிலையும் ஏற்பட்டுள்ளதாக மாற்றுவலுவுடையோர் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது பல்வேறு வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் நிலை யில் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியையும் புனர மைத்து தருமாறு பிரயாணிகளும் மாற்று வலு வுடையோரும் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளுக்கு நேற்று முதல் பஸ்சேவை விஸ்தரிப்பு

## அமைச்சரும், ஆளுநரும் ஆரம்பித்துவைத்தனர்



(தென்மராட்சி)

மக்களுக்கான போக்குவரத்துச் சேவையைக் கருத்திற் கொண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் இணைந்து புதிய பேருந்து சேவையை நேற்று ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் வைத்து சாவகச்சேரியிலிருந்து வரணி ஊடாக பருத்தித்துறை செல்லும் வழித் தடம் 754ம் இலக்க பேருந்தினை பொதுமக்களிடம் கையளித்தனர்.

முன்பதாக புதிய பேருந்துக்கான நாடாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாண ஆளுநரும் வெட்டி வைத்ததுடன் சம்பிரதாயப் பூர்வமாக அதன் பயணத்தையும் தொடக்கி வைத்தனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்திற்கு அமைய வழங்கப்பட்ட இப்புதிய பேருந்து சேவை ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் இதன் மூலம் மீள்குடியேற்றப் பகுதிகளுக்கான போக்குவரத்து சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சமூக விஞ்ஞான போட்டி

(அம்பலப்பொருமாள்)

துணுக்காய் வலய பாடசாலைகளுக்கு இடையிலான சமூக விஞ்ஞானப் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாந்தை கிழக்கு துணுக்காய் ஒட்டுசுட்டான் ஆகிய 3 கோட்டங்கள் ரீதியாகவே இப்போட்டிகள் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயப்பிரதி கல்வி பணிப்பாளர் கே. விஜயபாலா தெரிவித்தார். (121)

## பாதணிகள் அன்பளிப்பு

(அம்பலப்பொருமாள்)

துணுக்காய் வலய கரிப்பட்ட முறிப்பு பாடசாலை மாணவர்களுக்கு கனடா வாழ் தமிழர்களின் நிதியுதவியுடன் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் இப்பாடசாலைக்கு 3 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மேனிவனம் கிராமத்திலிருந்து கால்நடையாக வரும் மாணவர்களுக்கே முக்கியத்துவம் கருதி பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன. (121)

## மணியம் தோட்டம் பகுதிக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணியந்தோட்டத்திற்கு மின்சார வசதியை ஏற்படுத்துவதற்கான முழு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

துறை முக சந்தியில் இருந்து மணியம் தோட்டம் வரைக்கும் மின் கம்பங்களை நடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பகுதிக்கு விரைவாக மின் இணைப்பை வழங்கி மக்களுக்கு மின்சாரத்தை பெற்றுக்கொடுக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சாரம் இன்றி இருளில் மூழ்கி இருக்கும் இப்பிரதேசத்திற்கு விரைந்து மின் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வி)

## வயோதிபரின் சடலம் வேலணையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி வேலணைப்பகுதியில் தூக்கில் தொங்கி இறந்ததாகக் கருதப்படும் வயோதிபர் ஒருவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதேஇடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் ஆனந்த சிவராசா (வயது 56 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எஸ்)

## தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெற்ற 2011 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் நாட்டிய நாடகம், தனிநடனம் ஆகிய நிகழ்வுகளில் முதலிடம் பெற்று பாடசாலை திரும்பிய இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களை வரவேற்கும் வரவேற்பு நிகழ்வும், பாராட்டு விழாவும் கல்லூரியில் நடைபெற்றன.

கல்லூரி முதல்வர் அ.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் திருஞானசம்பந்த பிள்ளை, ஓய்வு பெற்ற ஆசிரியையும் நாடக எழுத்துருவாக்கம் செய்தவருமான பண்டிதை வை. கணேசபிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இவ் வெற்றிக்கு உழைத்த ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்திக்கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பக்கவாத்தியக் கலைஞர்களும் இப்பாராட்டு விழாவில் பாராட்டுப் பெற்றனர். கல்லூரியின் தமிழ் மன்றமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இவ் விழாவினை ஒழுங்கமைத்திருந்தன். (44)

## சுற்றாடல் மாசுபடுவதைத் தடுப்பதற்கு மாணவர்கள் முனைப்புடன் ஈடுபடவேண்டும்

### - மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் அறிவுரை

(யாழ்.நகர்)

சுற்றாடல் மாசடைவதிலிருந்து எமது பிரதேசங்களைப் பாதுகாப்பதன் மூலமே நோயற்ற வாழ்வு வாழமுடியும். சுற்றாடலை அசுத்தப்படுத்தும் காரணிகளை இனங்கண்டு மாணவர்கள் அவற்றை எமது சுற்றாடலில் சேரவிடாது தடுக்க முன்வர வேண்டும் என்று மாவட்ட சுற்றாடல் ஆணையாளர் எஸ்.சண்முகநாதன் குறிப்பிட்டார்.

துணுக்காய் கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.ஸ்ரீ வள்ளி ஜெகராஜன் தலைமையில், மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதமவிருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாடசாலைகளில் சுற்றாடல், முன்னோடிக் கழகங்கள் உருவாக்கப்படவேண்டும். கழக உறுப்பினர்களிடையே சுற்றாடலை மாசுபடுத்தும் காரணங்கள் பற்றி வழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

எமது வீடுகள்,வீதிகள்,பாடசாலைகள் போன்றவற்றை நாம் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எதிர்காலத்தில் எமக்குத் தேவையான மரக்கறி வகைகளை நாம் வீடுகளிலேயே உற்பத்தி செய்யப்பழகிக் கொள்ள வேண்டும். வீட்டுக் கழிவுப் பொருட்களையும்,மாட் டெரு,ஆட்டுப் பிழுக்கை போன்ற விலங்குக்கழிவுகளையும் விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்த வேண்டும் என்றார்.துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் த.மேகநா தனும் உரையாற்றினார்.(101)

## க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்.நகர்)

துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு கடந்தவாரம் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்க மாணவர்களால் நடாத்தப்பட்ட இப்பயிற்சிக் கருத்தரங்குகள் மல்லாவி மத்திய கல்லூரியிலும்,ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் நடைபெற்றன.

கடந்த வருடமும் மேற்படி பல்கலைக்கழக மாணவர்களால் பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதாகவும் இதன்மூலம சித்திவீதம் அதிகரித் துள்ளதாகவும் மீள்குடியேற்றம் நடைபெறும் பகுதி களில் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களின் பணி பாராட்டத்தக்கதென்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித் துள்ளார். (10)

## ஆடிப்பூர ருதுசோபன விழா


(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர ருதுசோபன விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

வெங்கடேஸ்வர வரதராஜப்பொருமாள் ஆலயத்திலிருந்து சீர் வரிசையும் 108 பால்கலச பவனியும் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.

காலை 8.00 மணிக்கு ஆடியார்கள் அம்பாளுக்கு பால் அறுகுசாத்தும் நிகழ்வு இடம்பெறும் 9.00 மணிக்கு அபிஷேகம் நடைபெறும்.

அம்பாளுக்கு ருதுசோபன பால்க்கலசம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)



தென்மராட்சியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அபிவிருத்தித்திட்ட நிகழ்வில் நகரசபையின் கீழ் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கான வேலைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பதையும், கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்களுடனான சந்திப்பில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மாணவர்களுக்கு "சிப்தொர" புலமைப்பரிசில் நிதி, மற்றும் உபகரணங்களை வழங்குவதையும் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ் பயனாளிகளுக்கு உதவிப் பொருட்களை வழங்குவதையும் காணலாம். (11)



கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஊவா நட்புறவுச் சங்கத்தினால் கட்டப்பட்ட மாடிக் கட்டடம் நேற்றுக்காலை 10 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 10 திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வித்தியாலய மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், ஜனாதிபதி கட்டடத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்துப் பார்வையிடுவதையும், ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், திறந்து வைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தையும் காணலாம். (109)

# ஒழுக்கப் பிறழ்வுகளை எதிர்கொள்வதற்கு இளைஞர்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இன்றைய தமிழ்ச்சமூகம் மிகவும் சீர்கேடான நிலையிலே காணப்படுகின்றது. இளையோரின் ஒழுக்கப் பிறழ்வான நடததைகள் பற்றிய தகவல்கள் அன்றாடம் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாகிவிட்டன.

கோயில்களில் கடவுளிடம் துன்பங்களை முறையிட்ட காலம் போய் கடவுள் சிலையைப் புரட்டி விற்கும் காலம் வந்துளளது. இதனால் பாதுகாப்புக்காகக் கோயில்களையே பூட்டவேண்டிய சூழ்நிலைகளையே உருவாக்கி விட்டது என்று கலாநிதி செ.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

ஆறுதிருமுருகன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற சின்னத்துரை உமாபாலனின் மாவை மான்மியம் நூல் வெளியீட்டு விழா, புலவர் ம.பார்வதிநாதசிவத்தின் பவளவிழா என்பவற்றில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எனவே அன்பு, பண்பு என்பவற்றைச் சொல்லிக் கொடுப்பதைவிட அவசியமானது இன்றைய சூழலில் ஒழுக்கப் பிறழ்வுகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு அறிவூட்டுவதே சிறந்த வழி என்றார்.

பவளவிழா நாயகரான புலவர் ம.பார்வதிநாதசிவத்திற்கு வாழ்த்துரை வழங்கிய தமிழ்த்துறைப் பேராசிரயிர் சி.சிவலிங்கராஜா -

ஈழத்துத் தமிழ்ப் புலமைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக விளங்குபவர் புலவர் ம.பார்வதிநாதசிவம். கவிதை, கட்டுரை, பததிரிகைத்துறை எனப் பலதுறைகளிலும் தனது திறனை வெளிப்படுத்தி வருபவர்.

ம.க.வேற்பிள்ளை, குருகவி மகாலிங்கசிவம் என்னும் பரம்பரையின் 3 ஆவது தலைமுறையைச் சேர்ந்தவர். பணிவும் தன்னடக்கமும் மிக்கவர். அவரது கவிதைகளுக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் முதன்மையான இடமுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கெல்வின் இரேனியஸ், பண்டிதர் ந.கடம்பேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர். நூலின் முதற்பிரதியை த.விநாயமூர்த்தியிடமிருந்து கொமர்ஷல் வங்கியின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் கா.கணேசமூர்த்தி பெற்றுக்கொண்டார். (44)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அம்பலப்பெருமாள்)

கனடா வாழ் தமிழ்ர்களின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு, துணுக்காய் வலய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன நேற்று வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு, துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (121)

# ஆலய உயிர்ப்பலி நிறுத்தம் உயர்மட்டக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் இடம்பெறும் உயிர்ப்பலியை நிறுத்துவது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்துக்குரிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் இந்து சமய துறவிகள், சமய முதன்மை அமைப்புக்களின் பிரதிநிதிகள், நீதித்துறை சார் பிரதிநிதிகள், பேராசிரியர்கள், அரச அதிகாரிகள், வைத்தியர்கள், பத்திரிகையாளர், சமய சமூக மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுண்டுக்குளிச் சந்தீல பேக்கரி வைச்சிருக்கிற குணமண்ணையைத் தெரியுமே. அவர் சொன்னார் கொழும்புத்துறை, துண்டி வீதியில் தங்கட கோயில்ல களவுபோனெண்டு.

அது ஒரே வளவில மூண்டு கோயில், பிரதானமானது சந்திர சேகரப்பிள்ளையார் மற்றது ஐயனார். இன்னொண்டு அம்மன் மூண்டும் பொல்லாத தெய்வங்களெல்லோ!

இந்த மூண்டு கோயிலும் இருக்கிற இடத்துக்கு மூண்டு தடவை போய் மூண்டு லட்சம் பெறுமதியான தேர்ச் சாமான்கள், ஐம்பொன் விக்கிரகங்கள், வெண்கலப் பொருட்களெண்டு திருடர் துணிகரமாகத் திருடிக்கொண்டு போயிருக்கிறாங்களெண்டு குணமண்ணை சொன்னார்.

அதுபோல. நாச்சிமார் கோவிலடியில வரேக்க தட்டாதெருவுக்கு அங்கால அந்த ‘மில்க்வைற்’ கொம்பனி அதுதான் சவுக்காரக் கொம்பனி இருக்கல்லே அதுக்குக் கிட்ட ஒரு பெரிய அரசமரத்தடிப் பிள்ளையார் கோயில். அதிலயும் விக்கிரகம் களவு போச்சுதெண்டு கதைச்சுதுகள்.

அதில போய் நிண்டு கேட்டா வயலின் வித்துவான். அவர் தான் கோயில் தலைவராம். அவர் சொன்னார் கிட்டதட்ட இருபது இருபத்தைஞ்சு கிலோ ஐமபொன் விக்கிரகமாம்.

ஏறத்தாழ இண்டைய விலையில மூண்டு லட்சத்துக்குக் குறையாதாம். அதுவும் மிகப் பழமை வாய்ந்த, 100 வருசங்களுக்குக் கிட்டவாக இருக்குமாம் செய்து.

அபப நான், உது பிடிபடும் உருக்கி விக்கேக்க எண்டன். வயலின் வித்துவான் சொன்னார், விக்கிரகங்களை அப்பிடியே முழுசாக் கடத்துறாங்களாமெண்டு.

பாருங்கோவன் எந்தப் பய பக்தியும் இல்லாமல் உந்தக் கள்ளர் கடவுள்ளேயும் கை வைக்கிறாங்கள்தான?

உப்பிடித்தான் கொழும்பு, கொச்சிக்கடை அந்தோனியார் கோயில் இருக்கல்லே. அங்க காலமையில தொழிலுக்குப் போகேக்க வடிவாக் கும்பிட்டுக்கிம்பிட்டுக் கொண்டு போவாங்களாம்.

பின்னேரம் வரேக்க நல்ல மஸ்தான் போட்டுட்டு வருவாங்களாம். அண்டைக்கு உழைப்புக் குறைவா இருந்தா அந்தோனியார் இருந்தபாடில்லையாம்.

தூஷண வார்த்தையால கேக்காத கேள்வியெல்லாம் கேட்டுட்டுத்தானாம் போவினை. உதுகளைப் பாக்கேக்க கொம்மியூனிஸ்ட்டுகள் சொல்லுறதுதான் உண்மை போல கிடக்கு.

அவங்கள் சொல்றாங்கள், கடவுள் எங்களைப் படைக்கேல்லையாம். கடவுளைப் படைச்சதே மனிசர்தானாம். பின்ன என்ன அப்பிடித்தான் இருக்கும் போல கிடக்கெல்லே?



# மூன்று தடுப்பணைகளுக்கு 65 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(யாழ்.நிருபர்)

தீவுப்பகுதியில் உள்ள மூன்று உவர்நீர்த் தடுப்பாணைகள் புனரமைப்புக்கென 65 மில்லியன் ரூபா நிதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

புங்குடுதீவு மடத்துவெளி உவர்நீர்த் தடுப்பணை, நெருந்தீவு உவர்நீர்த் தடுப்பாணை, காரைநகர் வேணன் உவர்நீர்த் தடுப்பாணை ஆகிய மூன்று தடுப்பாணைகளும் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இந்தத் தடுப்பாணைகளுக்கான ஆரம்ப புனரமைப்பு வேலைத் திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்தத் திட்டப் புனர்நிர்மாணப் பணிகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். (வி)

# சிறப்பாக நடைபெற்ற “துயரக்கடல்” வெளியீட்டு விழா

முல்லை கீ.பீ.நிதுன் எழுதிய ‘துயரக்கடல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் கிராம அலுவலர் நிலவன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் அ.ஜெயக்குமார் நூலினை வெளியிட்டுவைக்க முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் செ.அல்பிரட் பெற்றுக் கொண்டார்.

வெளியீட்டுரையினை அருட்சகோதரன் கீ. பீட் சுயாகரன் நிகழ்த்தினார். நுலிற்கான மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் துவாரகன் வழங்கினார். சிறப்புரையினை எழுத்தாளரும் கவிஞருமான தீபச்செல்வன் நிகழ்த்தினார். ஏற்புரையினை நூலாசிரியர் வழங்கினார்.

இந்த விழாவில் ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி ம.அன்ரனி ஜெகநாதன், வண பிதா நிருபன் நிசாந், முல்லைத்தீவு றோ.க.த.க பாடசாலை அதிபர் அருட்சகோதரி வலன்ரீனா. முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் செ.அல்பிரட் மற்றும் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(20.07.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆனி 4 ஆம் நாள்.

இராகுகாலம் 12.010–1.31, சுபநேரம் 4.31–6.01,

நட்சத்திரம் பூரட்டாதி பி.ப.5.33 வரை

திதி: பஞ்சமி பி.ப 5.08 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பண வரவு, உடல் உபாதை, குடும்பத்தில் கவலை, மனக்குறை, சோம்பல்.

**ரிஷபம:–** பணவரவு, சகோதர பாசம், நினைத்ததைச் சாதித்தல், நண்பர் வருகை, விபத்து.

**மிதுனம் :–** தேகசுகம் பாதிப்பு, குடும்பத்தில் சலனம், காரிய சித்தி, மனக்கவலை, வீண் அலைச்சல்.

**கடகம்:–** பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், சகோதர ஒற்றுமை, தொழில் நுட்பம்.

**சிம்மம்:–** தேக ஆரோக்கியம், பணவரவு, வீண் ஆத்திரப்படல், தொழிலில் வெற்றி, விபத்து.

**கன்னி :–** பணக் கஷ்டம், சகோதரபாசம், உடல் உபாதை, உற்சாகம்.

**துலாம் :–** பெரியோர் சந்திப்பு, வெளிநாட்டிலிருந்து உதவி, பண வரவு, குடும்பத்தில் கவலை.

**விருச்சிகம்:–** பணக் கஷ்டம், உறவினர் பாராட்டு, உடல்சுகக் குறைவு, மனக் கவலை.

**தனுசு:–** குடும்பத்தில் குழப்பம், நண்பர் தொல்லை, உறவினர் பகை, தொழில் வெற்றி, மனச் சஞ்சலம்.

**மகரம:–** தொழில் லாபம், வீண் ஆத்திரப்படல், பிணக்குத் தீர்தல், அதிகாரப் போட்டி, மனச்சஞ்சலம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், புதுப்பொலிவு, இருதய உற்சாகம், பணம் இருந்தும் இல்லாத நிலை.

**மீனம்:–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், உற்சாகம், பிணக்குத் தீர்வை, தெரு விபத்து.

# சச்சினும் ஒரு மனிதர்தான் என்பதனை இங்கிலாந்து வீரர்கள் புரிய வேண்டும்

## என்கிறார் மைக்கல் வோன்



(லண்டன்)

இந்தியாவில் சச்சின் சிறந்த வீரராக இருக்கலாம். ஆனால் அவரும் மனிதன் தான் என்பதை இங்கிலாந்து வீரர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் இடையிலான முதல் டெஸ்ட், நாளை லண்டன் லோர்ட்சில் தொடங்குகிறது. இந்தத் தொடர குறித்து மைக்கல் வோன் கூறியதாவது, இந்திய வீரர் சச்சின் சிறந்த துடுப்பாட்ட வீரராக உள்ளார். இதைக்கண்டு இங்கிலாந்து வீரர்கள் பயந்து விடக்கூடாது. அவரும் மனிதர் தான் என்பதை முதலில் நினைவில் கொள்ளவேண்டும்

சச்சின் தவறு செய்யாமல் இருக்க முடியாது. அவரைக் குறித்து வார்த்தைகளால் பேசுவதை விட்டுவிட்டு, அவருக்கு எதிராகப் பந்துகளால் பேசவேண்டும். 20 ஆண்டுகளாக சச்சின் தனது மட்டையால் தான் பேசி வருகிறார். இவர் தான் டொப்: எப்போதும் இல்லாத வகையில் சமீபகாலமாக சிறந்த ஆட்டத்தை வெளிபடுத்தி வருகிறார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட தொடரில் அவர் தான் முக்கிய துருப்புச் சீட்டு. இவரது 100 ஆவது சதம், வியக்கத்தக்க சாதனை. நான் இவரது காலத்தில் விளையாடியுள்ளேன். நான் பார்த்த வீரர்களில் அவர் தான் டொப். எவ்வித நெருக்கடி, கடினமான சூழலையும் எதிர்த்து, தன் மீதான எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப சரியாக செயல்படுவார்.

இந்தியாவில் ஜனாதிபதி, பிரதமரை விட இவர் தான் பிரபலம். ஒவ்வொரு முறை களத்தில் இறங்கும் போதும், ஏதாவது ஒரு நெருக்கடியில் தான் இருபபார். பின் அனைத்தையும் சரியாகச் செய்து துடுப்பாட்டத்தில் சாதிப்பார். அவரது துடுபபாட்டத் திறன் அசாத்தியமானது.

சச்சினின் துடுப்பாட்டம் குறித்து பத்தாண்டுகளில், எவ்வளவோ விமர்சனங்கள் வந்துள்ளன. இதுபோன்ற கருத்துககளைத் தனது துடுப்பாட்டத் திறனை முன்னேற்ற பயன்படுத்திக் கொள வார். இதனால் தான் அவர் இன்னும் களத்தில் நிற்கிறார்.

எதிர்வரும் டெஸ்ட் தொரில், இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள், சிறப்பான பந்துவீச்சை வெளிப்டுத்தும் பட்சத்தில், இந்திய வீரர்கள் தவறு செய்யத் தொடங்குவார்கள்.

இதைப் பயன் படுத்தித் தொடரை வெல்லலாம் என்று மைக்கல் வோன் தெரிவித்தார்.

# சினேகபூர்வ உதைபந்தாட்டம் கத்தாரை வீழ்த்தியது இந்தியா

(புதுடில்லி)

தோஹாவில் நடைபெற்ற நட்பு முறை கால்பந்தாட்டத்தில் இந்தியா, கத்தார் அணியை 2- 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

எதிர்வரும் 23 ஆம் திகதி உலகக்கோப்பை கால்பந்து போட்டிகளுக்கான ஆசிய மண்டலத் தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்காக அணிகள் தயார்ப்படுத்தி வருகின்றன. வியட்னாம் அணியை கத்தார் அணியும் யு.ஏ.இ. அணியை இந்தியாவும் எதிர்கொள்கிறது.

அதற்கு முன்னதாக நேற்றுமுன்தினம் நட்பு முறை பயிற்சி ஆட்டம் நடைபெற்றது. கால்பந்து தரவரிசையில் இந்தியா 147 ஆவது இடத்தில் உள்ளது. கத்தார் 94 ஆவது இடத்தில் உள்ளது.

ஆட்டம் தொடங்கி 16 ஆவது நிமிடத்தில் பெனால்டி மூலம் சுனில் சேட்ரி முதல் கோலை அடிக்க இந்தியா முன்னிலை பெற்றது. பிறகு ஆட்டத்தின் 72 ஆவது நிமிடத்தில் ஷில்குமார் சிங் இரண்டாவது கோலை அடிக்க கத்தார் அணி அதிர்ச்சியுற்று ஆக்ரோஷத்தைக் கூட்டியது. ஆனால் அந்த அணியினால் ஒரு கோலை மட்டுமே அடிக்க முடிந்தது.

# சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டி கிண்ணம் வென்றார் சோடர்லிங்

(பஸ்தாத்)



ஸ்வீடன் ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தை அந்த நாட்டைச் சேர்ந்த ராபின் சோடர்லிங் வென்றார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் டேவிட் பெடரரை சோடர்லிங் 6-2,6-2 என்ற நேர் செட்களில் வென்றார். மழையால் சுமார் 2 மணி நேரம் தாமதமாகத் தொடங்கிய இந்த ஆட்டம் 67 நிமிடங்களிலேயே முடிவுக்கு வந்தது. தொடக்கம் முதலே சிறப்பாக ஆடிய சோடர்லிங் 30 நிமிடத்தில் முதல் செட்டை வென்றார்.

சோடர்லிங் 2ஆவது முறையாக சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளார். இதற்கு முன் 2009 இல் அவர் வென்றார். சர்வதேச ரென்னிஸ் தர வரிசையில் சோடர்லிங் 5 ஆவது இடத்திலும், டேவிட் பெடரர் 6ஆவது இடத்திலும் உள்ளனர்.

# தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டமை முறையிட அனுமதி இல்லையாம்



(கொழும்பு)

தனது தங்கப்பதகம் பறிக்கபட்டமைக்கு எதிரான சவாலான முறைப்பாட்டை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை இலங்கை அதிகாரிகள் தடுத்ததாக ஊக்க மருந்து பாவித்தார் என நிருபிக்கப்பட்ட குத்துச் சண்டை வீரர் மஞ்சு வன்னியாராட்சி தெரிவிததுள்ளார்.

மேலும், அவ்வாறு அவர் முறைப்பாடு செய்தால் அது இலங்கையின் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏலக்கோரிக்கைக்கு அது தடையாக அமைந்துவிடும் என அரசாங்கம் தெரிவித்ததாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

2018 ஆம் ஆண்டு பொதுநலவாயப் போட்டிகளை நடத்துவதற்கு இலங்கை அவுஸ்ரேலியாவுடன் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த குற்றச்சாட்டினை விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மறுத்துள்ளார்.

# பிளெட்சரின் பயிற்சியாளர் அனுபவம் இந்திய அணிக்குப் பெரிய பலமாகும்

(லண்டன்)

இங்கிலாந்து கிரிக்கெட் அணி பற்றி நன்கு அறிந்த பிளெட்சர் இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருப்பது சாதகமான விடயம் என்று இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் இயான் பெல் கூறியுள்ளார்.

இந்திய-இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் போட்டி லண்டனில் நாளை தொடங்குகிறது. இது குறித்து பெல் செய்தியாளர்களிடம் கூறியதாவது- இப்போது இந்திய அணியின் பயிற்சியாளராக உள்ள சிம்பாப்வேயின் பிளெட்சர், முன்பு இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார். அவருக்கு இங்கிலாந்து அணி பற்றி முழுமையாகத் தெரியும். இது இந்திய அணிக்கு கூடுதல் பலம். இங்கிலாந்தில் எவ்வாறு விளையாட வேண்டும், பந்து வீச்சை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து அவரால் சிறப்பாக வழி காட்ட முடியும்.

இப்போது கிரிக்கெட் தொழில்நுட்ப ரீதியாக அதிகம் முன்னேறி விட்டது. வீடியோ மூலம் ஒவ்வொரு வீரரின் ஆட்டமுறையையும் எதிரணியினர் துல்லியமாக அறிந்து கொண்டு பந்து வீசுகிறார்கள். துடுப்பாட்ட வீரர்களும் வீடியோ மூலம் தங்களது தவறுகளை அறிந்து திருத்திக் கொள்கின்றனர்.

இந்திய அணி டெஸ்ட் போட்டியில் முதல் இடத்தில் உள்ளது. எனினும் அவர்களை எதிர்கொள்வதில் எங்களுக்கு எவ்வித பதற்றமும் இல்லை. இந்திய அணியுடன் விளையாட மிகுந்த ஆவலுடன் இருக்கிறேன் என்றார்.

# அறிவிக்கப்பட்ட ஐ.சி.சி.கனவு டெஸ்ட் அணியில் அவுஸ்ரேலிய, இந்திய வீரர்கள் ஆதிக்கம்

ஐ.சி.சி. டெஸ்ட் போட்டிக்கான கனவு அணியில் கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், சேவாக் உள்ளிட்ட நான்கு இந்திய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நாளை தொடங்கும் டெஸ்ட் போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இது 2,000 ஆவது டெஸ்ட் போட்டி. இந்த மகத தான மைல்கல்லை கௌரவிக்கும் விதமாக சர்வதேச வீரர்கள் அடங்கிய கனவு டெஸ்ட் அணியை ஐ.சி.சி. தெரிவு செய்யத் திட்டமிட்டது. இதற்காக பரிந்துரை செய்யப்பட்ட 60 வீரர்களின் பட்டியலை சர்வதேச கிரிக்கட் சபை (ஐ.சி.சி.) சமீபத்தில் வெளியிட்டது.

இதில் 2 தொடக்க வீரர்கள், 3 மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள், ஒரு விக்கெட் கீப்பர், ஒரு சகலதுறை வீரர் 3 வேகப்பந்து வீச்சாளர்கள், ஒரு சுழற்பந்து வீச்சாளர் என 11 வீரர்களை, ஐ.சி.சி. இணையத்தளம் மூலமாக இரசிகர்கள் தெரிவு செய்தனர். இதில் அதிகபட்சமாக இந்தியா மற்றும் அவுஸ்ரேலியா சார்பில் தலா நான்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்கிந்திய அணி சார்பில் இரண்டு வீரர்களும், பாகிஸ்தான் சார்பில் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடக்க வீரர்களாக சேவாக், கவாஸ்கர் உள்ளிட்ட இந்திய வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர்களாக சாதனை வீரர் சச்சின், அவுஸ்ரேலிய ஜாம்பவான் டொன் பிரட்மன், மேற்கிந்தியத்தீவு அணி பிரையன் லாரா உள்ளிட்டோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சகலதுறைப் பிரிவில் கபில்தேவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர் பிரிவில் அவுஸ்ரேலியாவின் ஷேன் வோர்ன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். விக்கெட் கீப்பராக அவுஸ்ரேலியாவின் கில்கிறிஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர்களாக மேற்கிந்தியத்தீவின் அம்புரோஸ், அவுஸ்ரேலியாவின் மெக்ராத், பாகிஸ்தானின் வசிம் அக்ரம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.சி.சி. கனவு டெஸ்ட் அணி: சேவாக், கவாஸ்கர், பிரட்மன், சச்சின், லாரா, கபில்தேவ், கில்கிறிஸ்ட், வோர்ன், அக்ரம், அம்புரோஸ், மெக்ராத்

# கோலாலம்பூர் அணியை வீழ்த்தி மூன்றாமிடம் பிடித்தது பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீனிகம விளையாட்டு நல்லுறவுக்கான நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான முரளி வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டியில் கோலாலம்பூரில் கிரிக்கெட் அக்கடமி அணியைத் தோற்கடித்த சென்.பற்றிக்ஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

சீனிகம எம்.சி.சி.விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற கோலாலம்பூர் அக்கடமி அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணி பற்றிக்ஸ் வீரர்களின் துல்லியமான பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ்வணி சார்பாக வஸ்ரன் நடீவ் மட்டும் கூடுதலாக 12 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஏ.எம்.நொபேட் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், எரிக பிரதாப் 6 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அஜித் டார்வின் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 55 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக்கள மிறங்கிய சென்.பற்றிக்ஸ் அணி 11.3 ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

அவ்வணி சார்பாக மொறிஸ் 31, ரியூபர் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வஸ்ரன் நடீவ் வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார் போட்டியின் ஆட்டநாயகனாக ஏ.எம்.றொபேட் தெரிவானார்.

# மகாஜனாவுடனான போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதின் கீழ் அணியினருக்கான மிகவும் பரபரப்பான போட்டி ஒன்றில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை 2 விக்கெட்டுக்களால் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றி கொண்டது.

ஸ்கந்தா மைதானத்தில் இடம்பெற்ற 50 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனா முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. 47.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை அவ்வணி பெற்றது. இந்த அணிசார்பாக எஸ்.ஜெனந்தன் (59 பந்துகளில்) 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் உட்பட 65 ஓட்டங்களையும் மயூரன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் கே.றொபேட்றிஷான், எஸ்.கானுஜன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மதுஷன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

225 ஓட்டங்கள் வெற்றி இலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 42.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஒரு நிலையில் ஸ்கந்தா 172 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களை இழந்து தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அப்போது இணைந்து கொண்ட நிரோஜனும், கானுஜனும் தம்மிடையே பிரிக்கப்படாத 9 ஆவது விக்கெட்டுக்காக 53 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை உறுதி செய்தனர். நிரோஜன் 85 பந்துகளில் 1 சிக்ஸர், 10 பவுண்டரிகளின் உதவியோடு ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும், ரி.சிந்துஜன், கே.றொபேட் நிஷான், ரி.நிதர்சன், கானுஜன் ஆகியோர் முறையே 27, 26, 25, 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகாஜனா அணியின் சார்பில் றமேஷ் குமார் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (44)

# டில்சானின் சகலதுறை ஆட்டத்தால் மானிப்பாய் இந்து வெற்றி பெற்றது

(யாழப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் பாடசாலை[illegible] கிரிக்கெட் சங்கத்தின் அனுசரனையுடன் யாழ்.மாவட்ட பாடசாலை 17வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தி வருகின்ற முதலாம் சுற்று லீக் ஆட்டம் ஒன்றில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியினை மானிப்பாய் இந்துக் கல்லூரி அணித் தலைவரின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றி கொண்டது.

இப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது 50 ஓவர்களினை கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி 18 ஓவர்களின் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களினை மட்டும் பெற்றுக்கொண்டது.

இதில் அதிகூடிய ஓட்டங்களாக நிலக்சன் 13யும்,நிரோஜன்10 சஞ்சீவன் மற்றும் மணனன் ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

வந்து வீச்சில் நிக்ஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 14. ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களினையும் அணித்தலைவர் டில்சான் 6 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும்,சபேசன் 4 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு 57 ஓட்டங்களினை வென்றால் வெற்றி பெறலாம் எனத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 12 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களினை இழந்து 57 ஓட்டங்களினை பெற்று 5 விக்கெட்டுக்களால் இப்போட்டியில் வெற்றி பெற்றது.

இதில மானிப்பாய் இந்துக் கல்லூரி அணித்தலைவர் டில்சான் ஆட்டம் இழக்காமல் 28 ஓட்டங்களையும் நிசாந்தன் 8 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் உடுப்பிட்டி அணியின் சார்பில் நிரோஜன் 5 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிலக்சன் 2 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் விநோதன் 2 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினார். (42)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நிறைவடைந்த விளையாட்டுப் போட்டிகளில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சார்பாக போட்டியிட்ட வீர, வீராங்கனைகளில் சிறந்த அடைவு மட்டத்தைப் பெற்று ஐந்து வீராங்கனைகள் சாதனை படைத்துள்ளனர். இதில் 13 வயதுப் பிரிவின் நீளம் பாய்தலில் 4.09 மீற்றர் பாய்ந்து வ. சாத்வினா 584 புள்ளிகளையும், 19 வயதுப் பிரிவின் 100 மீற்றர் போட்டியில் 14.0 நிமிடத்தில் ஓடி இ. ஜக்சனா 724 புள்ளிகளையும், 19 வயதுப் பிரவில் அ. பவித்திரா 745 புள்ளிகளையும், 21 வயதுப் பிரிவின் 100 மீற்றர் போட்டியில் 14.2 நிமிடத்தில் ஓடி இ. காவேரி 697 புள்ளிகளையும், 21 வயதின் நீளம் பாய்தலில் 4.72 மீற்றர் பாய்ந்து ப. பிரியதர்சினி 751 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்து தங்கப் பதக்கத்தைப் பெற்றதுடன் பாடசாலையின் வெற்றிக்கும் துணை புரிந்தனர்.

# கனுசனின் அபாரப் பந்து வீச்சினால் விக்ரோறியாவை வீழ்த்தியது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கொட் சங்கம் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரனையுடன் யாழ்.மாவட்ட பாடசாலை 15வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் நடாத்தி வருகின்ற முதலாம் சுற்று லீக் ஆட்டம் ஒன்றில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியினை இலகுவாக 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

கடந்த திங்கட்கிழமை யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி 15 வயதுப்பிரிவு 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி கனுசனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 24 ஓவர்களின் 55 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் விக்ரோறியா அணியின் சார்பில் பிரசாந் 18 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார். உதிரிகளாக சென்றோன்ஸ் அணியில் 26 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கபட்டிருந்தன.

பந்து வீச்சின் சென்சோன்ஸ் அணி வீரன் கனுசன் 8 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களையும், நிரோசன் 3 விக்கெட்டுக்களையும், துவாரகன் 1 விக்கெட்டினையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்கு 56 ஓட்டங்களை பெற்றால் வெற்றி பெறலாம் என துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் அணி 16 ஓவர்களில் 1 விக்கெட்டினை மட்டும் பெற்று குறிப்பிட்ட எண்ணிக்கையைப் பெற்று போட்டியில் வெற்றி பெற்றது.

சென்ஜோன்ஸ் அணி வீரர் கபிலன் ஆட்டம் இழக்காமல் 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தார். (42)

# வடமாகாண பாடசாலை மெய்வல்லுநர் போட்டி முதல் நான்கு இடங்களைப் பெற்றவர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் முதல் நான்கு இடங்களைப் பெற்ற மாணவர்களின் தொடர்ச்சி வருமாறு-

**17 வயதுப் பிரிவு பெண்கள்**

குண்டெறிதல்

ஆர்.தர்சிகா - வவு.தமிழ் ம.வி, என்.சாமந்தி - யாழ்நெல்லியடி ம.ம.வி, எச்.கண்ணா நடராசா - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஆர்.சுஜிதா - வவு.சுண்டிக்குளம் ம.வி.

**400 மீற்றர் ஓட்டம்**

ஏ.அனற் - மாதகல் சென்.ஜோசப் ம.வி, கே.யூலிற் ஜாமினி - மன்.நானாட்டான் ம.வி, கே.சயிதா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, வி.ஜெனிதா - வவு.சைவப்பிர காச எல்.சி.

**100 மீற்றர் தடைதாண்டல்**

டி.நிதுஜா - விக்ரோறியாக் கல்லூரி, டி.டயானா - மன்.நானாட்டான் ம.வி, ஜி.கஸ்தூரியா - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, கே.கலைமகள் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**800 மீற்றர் ஓட்டம்**

ஏ.அனற் - மாதகல் சென்.ஜோசப் ம.வி, ஏ.அனுஷா - மன்.சின்னவளையன் கட்டு ம.வி, கே.நிகேந்தினி -யாழ்.இராம நாதன் கல்லூரி.

முப்பய்ச்சல்

ஏ.அனற் - மாதகல் சென்.ஜோசப் ம.வி, ரி.நிவேதா - முல்.ஒட்டுசுட்டான் ம.வி, எஸ்.ஜென்சியா - மன்.நானாட்டான் ம.வி, எஸ்.வட்சாயினி- இளவாலை மெய்கண்டான் ம.வி.

நீளம் பாய்தல்

வி.யோகமாலினி - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, டி.நிதுஜா - விக்ரோ றியாக் கல்லூரி, எஸ்.மரிஸ்ரெலா - மன்.நானாட்டான் ம.வி, ஆர்.மிதிலா - வரணி ம.வி.

(தொடரும்)

## சிறப்பு மேன்முறையீட்டை திரும்பப் பெற்றார் பொன்சேகா

(கொழும்பு)

இரண்டாவது இராணுவ குற்றவியல் நீதிமன்ற நியமனங்களுக்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த சிறப்பு மேன்முறையீட்டினை திரும்பப் பெற்றுக்கொண்டதை அடுத்து கொழும்பு மேல்நீதிமன்றம் சிறப்பு மேன்முறையீட்டினை நிராகரித்துள்ளது.

இரண்டாவது இராணுவ குற்றவியல் நீதியரசர்கள் நியமனத்தில் பக்கசார்ப்பு தோன்றுவதாக குறித்த சிறப்பு மேன்முறையீட்டை சரத்பொன்சேகா தாக்கல் செய்திருந்தார்.

பிறிதொரு நீதிமன்றத்திலும் இது தொடர்பான வழக்கு முன்னெடுக்கப்பட்டு வருவதால் சிறப்பு மேன்முறையீட்டினை மீளப்பெறுவதாக சரத்பொன்சேகாத் தரப்புச் சட்டத்தரணி மேல்நீதிமன்றத்தில் தெரிவிததுள்ளார்.

இதனைக் கருத்திற் கொண்ட நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க தலைமையிலான மூன்று நீதியரசர்களை கொண்ட குழு சிறப்பு மேன்முறையீட்டினை நிராகரித்தது.

## உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு யாழிலும்,கிளிநொச்சியிலும் கண்காணிப்பு

### மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் மனித உரிமை ஆணைக்குழு கண்காணிப்பு நடாத்தத் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது இரண்டு குழுக்கள் கண்காணிப்பு பணிகளுக்காக கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பல எதிர்க்கட்சிகள் முறைப்பாடு செய்துள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த முறைப்பாடுகளை கவனத்திற் கொண்டு கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்தத் தீர்மானித்ததாக மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேர்தல்களை பிரச்சார நோக்கில் அரசாங்கம் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வடக்கு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளை அனுப்பி வைக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவிடம், பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

## பேச்சுவார்த்தை தோல்வியில்



(கொழும்பு)

பல்கலைக் கழகவிரிவுரையாளர்களின பிரச்சினைக் கான கலந்துரையாடல தோல்வியில் முடிவடைந்ததாக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் தெரிவிக்கின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் தமது கோரிக்கைகளுக்கு அரச தரப்பு உடன்படவில்லை என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் கலாநிதி மஹீம் மென்டிஸ் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## உள்ளூராட்சித் தேர்தலில் தவறு நடந்தால் பதவி துறப்பாராம் தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏதேனும் தவறு இழைக்கப்பட்டால் பதவியை துறக்கவும் தயங்கப் போவதில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியா தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டாலோ, அதிகாரிகள் வேண்டுமென்றே குற்றச் செயல்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டாலோ பதவியை இராஜினாமா செய்யப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதவியை இராஜினாம செய்ததன் பின்னர் ஏதேனும் தூதுவர் பதவியோ அல்லது வேறு பதவியையோ பெற்றுக் கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.


தேர்தல் தினமன்று மோசடிகள் இடம் பெற்றால் குறித்த வாக்களிப்பு நிலையத்தின் தேர்தல் முடிவுகளை சூன்யமாக்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களுக்கு முன்னர் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் தேர்தல்களை உரிய முறையில் நடாத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

## இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களினதும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன

### என்கிறார் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய



(கொழும்பு)

நாட்டின் சகல மக்களினதும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

எந்தவொரு இன சமூகத்திற்கும் பக்கச்சார்பான முறையில் மனித உரிமைச் சட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை என்பதனை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைக் கோட்பாடுகள் நடைமுறையில் அமுல்படுத்தப்படுவதாகவும் மேற்குலக நாடுகளில் அவை வெறும் எழுத்து மூலமான ஆவணமாக பேணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில மேற்கு ஊடகங்களும் மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை தொடர்பில் பிழையான கருத்துக்களை தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றன.

தற்போது இலங்கையில் மக்கள் அச்சமின்றி வாழ்ந்து வருவதாகவும் அதற்கான பின்னணியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஈராக்கிலுள்ள இலங்கைப் பணியாளர்கள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

(கொழும்பு)

இலங்கை பணியாளர்கள் 26 பேர் மூன்றாவது முறையாகவும் ஈராக்கின் அல்-அமாரா நகரில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

19 மாத சம்பள நிலுவை வழங்கி தம்மை இலங்கைக்கு அனுப்புவதாக ஈராக் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றாத காரணத்தினால் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

தமது பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுத் தரும் வரை தமது உண்ணாவிரதத்தை கைவிடப்போவதில்லை என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

குறித்த இலங்கையர்கள் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சந்தர்ப்பங்களில் ஈராக் அரச பிரதிநிதிகள் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்த காரணத்தினால் உண்ணாவிரதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

எனினும் இதுவரை இந்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதேவேளை மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள இலங்கையர்கள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவிக்கையில்,

குறித்த இலங்கையர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சித்து வருவதாக தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## சுதந்திர வர்த்தகவலயத் தாக்குதல் மருத்துவ அறிக்கையை பெறப் பணிப்பு

(கொழும்பு)

சுதந்திர வர்த்தக வலயத்தில் கடந்த மே 30ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை எதிர்த்து சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் 10 பேரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்விசாரணையின்போது, காயமடைந்து வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்ட மனுதாரர்களான சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் மருத்துவ அறிக்கைகள், சிகிச்சை அட்டைகள், வேறு மருத்துவ கூற்றுக்களை மருத்துவ அதிகாரிகளிடமிருந்தும், தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்தும், பெற்றுக்கொள்ளுமாறு உயர்நீதின்றம் பதிவாளருக்கு அறிவுறுத்தியது.

இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு பொலிஸார் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ நீதி மன்றில் கூறினார்.

விசாரணை முடியும் வரை கால அவகாசம் வழங்கும்படி அவர் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டதால் விசாரணை அறிக்கையை சமர்பிக்க ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது.

## தெற்காசிய கடற்பாதுகாப்பு கூட்டம் கலந்துகொள்வதை தவிர்த்த இந்தியா

(கொழும்பு)

கடந்த 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய கடல் பாதுகாப்பு தொடர்பான கூட்டத்தில் இந்தியா கலந்துக்கொள்ளவில்லை என கூறப்படுகிறது.

கடற்கொள்ளையை தடுத்தல், பிராந்தியத்தின் கடல் பாதுகாப்புக்கு ஏனைய நாடுகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் அமெரிக்காவின் அனுசரனையில் கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மாலைத்தீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர். எனினும் தெற்காசிய பிராந்தியத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமான நாடாக கருதப்படும் இந்தியா இந்தக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளாது அதனை தவிர்த்து கொண்டுள்ளது

## யுத்தத்தின் பின் சேமிக்கும் பணத்தை மக்கள் நலனுக்குப் பயன்படுத்த வேண்டும்



(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் சேமிக்கப்படும் பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை முன்னெடுப்பதற்காக பாரியளவு பணம் செலவிடப்பட்டதாகவும், இந்தப் பணத்தை தற்போது மக்கள் நலனுக்காகப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யுத்தத்தின் பின்னர் நாடு ஓர் முக்கியமான தருணத்தை அடைந்துள்ளது

யுத்தத்திற்காக செலவிட்ட பணத்தைக் கொண்டு மக்களை பாதுகாக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். யுத்தத்திற்காக செலவிட்ட பணத்தைக் கொண்டு மக்களை பாதுகாக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுறுத்தியுள்ளார்.

ஒரு குடும்பத்தில் உள்ளவர்களது வயது எல்லைகளும் அவர்கள் கடமைகளும் வருமாறு-

| |
|---|
| 15 வயதிற்குக் குறைந்தவர்கள் பாடசாலை செல்கின்றனர் |
| 15 - 25 வயதிற்குட்பட்டவர்கள் உயர்கல்வி கற்கின்றனர் |
| 25 - 55 வயதிற்குட்பட்டவர்கள் தொழில் செய்கின்றனர் |
| 55 வயதிற்கு மேற்பட்டோர் ஓய்வாக உள்ளனர் |

ராஜா தான் பாடசாலை செல்லும் போது வரனைப் பாடசாலையிலும் மஞ்சுவைப் பல்கலைக்கழகத்திலும் சேர்த்துவிட்டுத் தனது தந்தையாரைப் பிள்ளையார் ஆலயத்தில் இறக்கிவிட்டுச் சென்றார். ராஜாவின் தந்தையார் சுப்பிரமணியத்தின் பேரப்பிள்ளைகள் வரன், மஞ்சு, துளசி ஆகியோர் ஆவர்.

36. ராஜாவின் வயதெல்லை என்ன?

..............................................................................................................................

37. வரனின் வயது 12 ஆண்டுகள் எனின், மஞ்சு வரனைவிட குறைந்தது எத்தனை ஆண்டுகள் மூத்தவனாக இருப்பான்?

..............................................................................................................................

38. சுப்பிரமணியத்தின் மிகக் குறைந்த வயது என்னவாக இருக்க முடியும்?

..............................................................................................................................

**கல்விச் சுற்றிலா ஒன்றின்போது பங்கு பற்றியவர்களில் சிலர் யாழ்.கோட்டையையும் அதன் இடிபாடுகளையும் பார்வையிட்டனர். யாழ்.கோட்டையைப் பார்வையிட்ட அனைவரும் யாழ்.கோட்டை முனீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தனர். ஆலய வழிபாட்டில் என் தங்கை கற்பூரம் கொழுத்தி அர்ச்சனை செய்தாள்.**

இந்தத் தகவல்களின் பிரகாரம் கீழ்வரும் கூற்றுகள் சரியாயின் "S" எனவும், பிழையாயின் "R" எனவும் கூற முடியாது எனின் "T" எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

39. இச்சுற்றுலாவில் மாணவிகளும் பங்கு பற்றினர். (..........................................)

40. இச்சுற்றுலாவில் ஆலய தரிசனம் செய்தோர் எண்ணிக்கை கோட்டையைப் பார்த்தோரின் எண்ணிகையிலும் அதிகம். (..........................................)

41. ஆண்கள் மாத்திரம் கோட்டையைப் பார்வையிட்டனர். (..........................................)

42. சுற்றுலாவில் கலந்துகொண்ட அனைவரும் கோட்டை முனீஸ்வரர் ஆலய தரிசனம் செய்தனர். (..........................................)

**"எமது நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு கணியங்களை அளக்கின்றோம். சில அளவீடுகள் செம்மையாகவும் சில திருத்தமற்றும் அளக்கப்படுகின்றன"**

கீழ்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் அளத்தலுக்குப் பயன்படும் கருவி அமைப்புக்களைப் பெயரிடுக.

| | சந்தர்ப்பம் | கருவி / அமைப்பு |
|---|---|---|
| 43. | ஒரு பொருளின் நீளத்தை அளத்தல் | |
| 44. | ஒரு பொருளின் நிறையை அளத்தல் | |
| 45. | நேரத்தை காலத்தை அளத்தல் | |
| 46 | ஒரு நாளின் வெப்பநிலையை அளத்தல் | |
| 47. | மனிதனின் உடல் வெப்பநிலையை அளத்தல் | |
| 48 | ஒரு நாள் பெய்த மழை வீழ்ச்சியை அளத்தல் | |
| 49. | காற்று வீசும் திசையை அளத்தல் | |
| 50. | காற்று வீசும் வேகத்தை அளத்தல் | |





தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - II
1மணி 15 நிமிடம்
கல்வி முரசு
வெளியீடு 23
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.



கீழ்வருவதைக் கவனமாக வாசித்துப் பொருத்தமான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

**இருதயபுரக் கல்லூரி**
**கலை, வர்த்தக மாணவர் மன்றம்**
**வணிகச்சுடர் மலர் வெளியீடு**

| | |
|---|---|
| காலம் | : இன்று (06.06.2001) புதன்கிழமை பி.ப. 1 மணி |
| இடம் | : ஸ்தாபகர் நமசிவாயம் மண்டபம் |
| தலைவர் | : செல்வன் ஸ்ரீ.வரன் |
| ஆசியுரை | : திரு.ச.செல்வராசா (அதிபர்) |
| வாழ்த்துரை | : திரு.பொன்.சபாரத்தினம் (ஆசிரியர்) |
| பிரதம விருந்தினா | : கலாநிதி பொன்.சக்திவேல் தம்பதிகள் (தலைவர், நுண்கலைத்துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்) |
| சிறப்பு விருந்தினர் | : திரு.ச.ஜெயரத்தினம் (முகாமையாளர், வ.பி.போ.ச) |
| கௌரவ விருந்தினா | : திரு.க.சுந்தரலிங்கம் (முகாமையாளர், கூ.மொ.வி.தி) |
| வெளியீட்டுரை | : திரு.வி.அருளம்பலம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, இருதயபுரம்) |
| மதிப்பீட்டுரை | : திரு.சி.விஜயரத்தினம் (விரிவுரையாளர், முகாமைத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| முதற்பிரதி பெறுபவா | : திரு.பொ.சிவசுப்பிரமணியம் (உரிமையாளர், கே.எஸ்.வி.குறூப்) |

**கிளைவானை,**
**இருதயபுரம்.**

**கலை, வர்த்தக மாணவர் மன்றம்,**
**இருதயபுரக் கல்லூரி.**

01. என்ன விடயத்தை இது விபரிக்கின்றது?

..............................................................................................................................

02. இங்கு "மலர்" என்னும் சொல்லின் பொருள் என்ன?

..............................................................................................................................

03. இங்கு வெளியிடப்படும் மலரின் பெயர் என்ன?

..............................................................................................................................

04. இந்த நிகழ்வு நடைபெறும் நாள், மாதம் ஆகியவற்றை ஆங்கிலச் சொற்களில் எழுதுக.

..............................................................................................................................

05. இந்த நிகழ்வு இடம்பெறும் நேரத்தை நியம நேரமாக எழுதுக.

..............................................................................................................................

06. இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்குபவர் பெயரை எழுதுக.

......................................................................

07. பிரதம விருந்தினராகக் கலந்துகொள்பவர் பெயரை எழுதுக.

......................................................................

08. இந்த மலரை மதிப்பீடு செய்து உரையாற்றுபவர் பெயரை எழுதுக.

......................................................................

09. வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளரின் பெயரை எழுதுக.

......................................................................

10. கூ.மொ.வி.நி என்பதன் விரிவாக்கத்தை எழுதுக.

......................................................................

**நீங்கள் இதுவரை கற்ற பாடல்கள் சில இங்கே தரப்படுகின்றன. அவற்றை எழுதியவர்கள் பெயர்களை எழுதுக.**

11. தைத்திருநாள் இல்லமெல்லாம்
தளிர்ந்திடும் தைப்பொங்கல் (......................................)

12. வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும் (......................................)

13. பொய் சொல்லக்கூடாது பாப்பா - என்றும்
புறஞ் சொல்லக்கூடாது பாப்பா (......................................)

14. எங்கள் நாடு இன்ப வீடு
என்றே உணர்ந்திடுவோம் (......................................)

15. தொட்டு முறுக்காத மீசையப்பா! கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார்! கறைச்
சோகி போலே பெரும் பல்லைப்பார் (......................................)

16. மாமணியோ முத்தோ
மரகதமோ மன்னவர் தம்
தாம முடி மீது
தயங்கும் வயிரமதோ (......................................)

17. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று (......................................)

**கீழ்வரும் சொற்களைப் பொருள் விளங்குமாறு வாக்கியத்தில் அமைக்க.**

18. அங்காடி

19. அகராதி

20. செய்தித்தாள்

**கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


21. 1985.04.21 இல் சாருமதியின் வயது 10 ஆண்டு, 4 மாதம், 28 நாட்கள் எனின் சாருமதியின் பிறந்த தினம் என்ன?

......................................................................

22. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப.9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக.

......................................................................

23.




இவ்வுருவின் சுற்றளவு என்ன?

......................................................................



24. 1/3, 1/12, 1/6, 1/8 ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

......................................................................

25. 215.3 உடன் 34.8 இனைக் கூட்டுக.

......................................................................

26. 0.7 இனைப் பின்னமாக எழுதுக.

......................................................................

27. 30 நாட்களிலும் குறைவான நாட்களையுடைய மாதங்களினதும் 30 நாட்களிலும் கூடுதலான நாட்களையுடைய மாதங்களினதும் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

......................................................................

28. 4/7 = ............/21 = 32/................. இடைவெளிகளுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

......................................................................

29. 6 நாள் வேலை வாரம் கொண்ட ஒரு மாதத்தில் தொழிலாளி ஒருவரின் நாட்சம்பளம் ரூபா 250 ஆகும். ஆயினும் சனிக்கிழமைகளில் நடைபெறும் வேலைக்கு வழமையான சம்பளத்துடன் மேலதிகமாக ரூபா 250 வழங்கப்படும். இருவார முடிவில் தொழிலாளி பெறும் சம்பளத்தை எழுதுக.

......................................................................

30. ஒரு குறிப்பிட்ட பரீட்சை விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களில் மட்டும் நடைபெற்றது. 200 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 100 பேர் கணிதமும், 120 பேர் விஞ்ஞானமும் சித்தியடைந்தனர். விஞ்ஞானம் சித்தியடைந்தோர் எத்தனை பேர்?

......................................................................

**குறித்த ஒரு வாரத்தில் தொடர்ந்து 5 நாட்கள் குறித்த ஒரு வீதியூடாகப் பயணம் செய்த வாகனங்களின் எண்ணிக்கையை இவ்வட்டவணை காட்டுகின்றது. இதை நன்கு விளங்கிக் கொண்டு தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| தினம் | வாகன எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| திங்கள் | | 120 |
| செவ்வாய் | 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌<br>卌 卌 卌 卌 卌 卌 卌 卌 | |
| புதன் | 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌<br>卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 | 110 |
| வியாழன் | | 95 |
| வெள்ளி | 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌<br>卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 卌 | |

31. செவ்வாயக் கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும் வந்த வாகன எண்ணிக்கை என்ன?

......................................................................

32. திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் வந்த வாகன எண்ணிக்கையை வரவுக் குறிகளில் குறித்துக் காட்டுக.

......................................................................

33. கூடுதலாக வாகனங்கள் வந்த நாள் எது?

......................................................................

34. வாகன ஓட்டம் குறைவாக இருந்த நாள் எது?

......................................................................

35. இவ்வாரத்தில் வாகனங்கள் ஓடாமல் இருந்த நாட்கள் எவை?

......................................................................



# "வடக்கின் வசந்தம்"



## வட மாகாணத்திற்கு ஊவா மாகாணம் நல்லுதவி

### நல்லிணக்கம், நல்லெண்ணம், ஒற்றுமை வளரட்டும்











**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்தொகுதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் 19.07.2011 செவ்வாய்க்கிழமை காலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.**






இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தையும், நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கும் நோக்குடன் ஊவா மாகாண சபையின் நிதியுதவியில் யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் "ஊவா-வடக்கு நட்புரிமை மண்டபம்" என்கின்ற புதிய கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.





இப் பாடசாலையின் அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட இப் புதிய கட்டிடத்தொகுதியின் நிதியீட்டமானது ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ அவர்களாலும், கௌரவ ஆளுநர் சி.நந்த மத்தியூ அவர்களாலும், சபையின் கௌரவ அங்கத்தவர்களாலும். வடமாகாணத்திற்கு உவந்தளிக்கப்பட்டது.





வடமாகாண சபையின் கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களின் வழிகாட்டல், நெறிப்படுத்தல், மேற்பார்வையில் இக்கட்டிடம் சிறப்புடன் மிளிர்கின்றது.

இக்கட்டிடத்தை அமைக்கும் பணியில் இலங்கை பாதுகாப்பு படை வீரர்கள் தமது மனித உழைப்பை சிறப்பாக வழங்கினர்.

(C/840)

# அணுமின் நிலையத்திற்குரிய யுரேனியம் ஆந்திர மாநிலத்தில் கண்டுபிடிப்பு

(ராஜஸ்தான்)

அணுமின் நிலையத்திற்கு தேவையான முக்கியமான பொருள்களில் ஒன்றான யுரேனியம் தாது ஆந்திராவில் மிக அதிகளவில் உள்ளதாக அணு விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


ஆந்திராவின் தும்பலப்பள்ளி என்னும் இடத்தில் உள்ள சுரங்கங்களில் இந்த வகைத் தாதுப்பொருள் அதிகளவில் குவிந்து உள்ளதாகவும் உலகிலேயே அதிகளவிலான யுரேனியம் இங்கு கிடைக்கக் கூடும் என அணுசக்தி கமிஷனின் சேர்மன் ஸ்ரீகுமார் பானர்ஜி தெரிவித்துள்ளார்.

மேலும் ஜார்கண்ட், மேகாலயா, கர்நாடகா மாநிலங்களில் யுரேனியம் இருப்பதை யுரேனியம் கார்பரேசன் ஆப் இந்தியா நிறுவனம் கண்டறிந்துள்ளது.

கர்நாடகாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள யுரேனியம் உயர்வகையை சேர்ந்தது என்றும் ஆந்திராவில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் யுரேனியம் உயர்வகை அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்

# சாயிபாபா கோவிலிலிருந்து 34 கிலோ தங்கம் மீட்கப்பட்டது



(புட்டபார்த்தி)

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலைத் தொடர்ந்து புட்டபர்த்தியில் உள்ள சாய் பாபாவின் யஜுர் மந்திரில் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் தங்கநகைகள் இருந்தது தெரியவந்துள்ளது.

புட்டபர்த்தியில் சாய்பாபாவின் தனி அறையில் உள்ள சொத்துக்களை மதிப்பிட்டு வரும் அதிகாரிகள் அங்கு 340 கிலோ வெள்ளி, ரூ 5.8 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் ரூ 2 கோடி ரொக்கம் ஆகியவை இருந்ததாக கணக்கிட்டுள்ளனர். கணக்கிடும் பணி இன்னும் முடியவில்லை.

8 அறைகளில் சோதனையிடப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் வருமான வரித்துறை உத்தரவின்படி வங்கி ஒன்றில் பாதுபாப்புச் செய்யப்பட்டுள்ளது. தங்கத்தை மதிப்பிடும் பணி இன்னும் முடியவில்லை. இதுவரை 34.438 கிலோ தங்கம் அங்கிருந்து பெறப்பட்டுள்ளது.



மத்திய பிரதேசம் குணா மாவட்டத்தில் அசோக் நகரில் கோச்சா அணைக்கட்டு உள்ளது. இவ்வழியே சென்ற பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அணைக்குள் விழுந்தது. இந்த விபத்தில் உயிர் தப்பிய பயணிகள், நீரில் மூழ்கிய பஸ் மீது மரண பீதியுடன் அமர்ந்திருப்பதைக் காணலாம்.


## பெற்றோர்களே...!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்


# தமிழக மக்கள் தொகையில் 52 வீதமானோர் கிராமவாசிகள்

(சென்னை)

தமிழக மக்கள் தொகை 7 கோடியே 21 லட்சத்து 38 ஆயிரத்து 958 ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 52 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வசிப்பவர்கள்.

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன. அதில் தமிழகத்தின் மக்கள் தொகை 7 கோடியே 21 இலட்சத்து 38 ஆயிரத்து 958 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் அதாவது 52 சதவீதம் பேர் கிராமங்களில் வசிக்கின்றனர்.

தலைநகர் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் 48 சதவீதம் பேர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். தமிழகத்தில் ஆண்களின் எண்ணிக்கை 3 கோடியே 71 இலட்சத்து 89 ஆயிரத்து 229 ஆகும். பெண்களின் எண்ணிக்கை 3 கோடியே 49 இலட்சத்து 49 ஆயிரத்து 729 ஆகும்.

சென்னையில் நகர்ப்புற மக்கள் தொகை 13 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேபோல விழுப்புரத்தில் கிராமப்புற மக்களின் எண்ணிக்கை 7.94 சதவீதம் உயர்ந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 1000 ஆண்களுக்கு 1041 பெண்கள் உள்ளனர். இங்கு தான் ஆண்களை விட பெண்கள் அதிகம் உள்ளனர்.

# இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வுகாண வேண்டும்

## வெளிவிவகாரச் செயலர் நிருபமாராவ்



(சென்னை)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டுமென இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிரூபமா ராவ் தெரிவிததுள்ளார்.

இந்திய இலங்கை மீனவர்களுக்கு இடையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு நடைமுறைச் சாத்தியப்பாடுடைய தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைதியான முறையில் இரண்டு நாட்டு மீனவர்களும் தொழிலில் ஈடுபடக் கூடிய வகையில் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக இரண்டு நாடுகளுமே தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய மீனவர்களின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை அதிகாரிகள் அண்மையில் உறுதியளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

# சமச்சீர்க் கல்வி தொடர்பான வழக்கில் மேன்முறையீடு செய்கிறது தமிழக அரசு

(சென்னை)

சமச்சீர்க் கல்வித்திட்டம் தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது தொடர்பாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் டெல்லி விரைந்துள்ளார்.

அவருடன் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் சபீதாவும் சென்றுள்ளார். சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அளித்த தீர்ப்பில், நடப்பாண்டில் அனைத்து வகுப்புகளுக்கும் சமச்சீர் கல்வித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது. மேலும் 22 ஆம் திகதிக்குள் அனைவருக்கும் சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்கள் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

இந்த நிலையில் மேன்முறையீடு செய்வது தொடர்பாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் சி.வி.சண்முகம், செயலாளர் சபீதா, சட்டமா அதிபர் நவநீத கிருஷ்ணன் ஆகியோர் நேற்றுமுனத் தினம் இரவே டெல்லி புறப்பட்டுச் சென்றனர். மேன்முறையீடு தாகல் செய்யபபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தி.மு.க.விலிருந்து வெளியேறுவதற்கு முன்னாள் அமைச்சர் துரைமுருகன் முடிவு

(சென்னை)

தி.மு.க.வில் இருந்து முன்னாள் அமைச்சர் துரைமுருகன் வெளியேற இருப்பதாக பரபரபபுத் தகவல்கள் வெளியாகி வருகின்றது. தி.மு.க. முன்னாள் மத்திய அமைச்சர்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன் ஆகியோர் மீது 2ஜி ஊழல் முத்திரை, சட்டமன்ற தேர்தல் தோல்வி, திகார் சிறையில் மகள் கனிமொழி என்று அடுத்தடுத்து விழுந்து வரும் அடியால், நிலை குலைந்து போய் இருக்கின்றார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இந்த நிலையில் இன்னொரு அதிர்ச்சியையும் அவர் சந்தித்துள்ளார். இது எதிர்பாராத விதமாக நேர்ந்த அதிர்ச்சி

2ஜி ஸ்பெட்ரம் விவகாரத்தில் திகார் சிறையில் உள்ள கனிமொழியை துரைமுருகன் சந்திக்க சென்ற போது, அவர் கூறியதாக சில தகவல்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதி காதுக்கு சென்றதாம்.

இதனையடுத்து கருணாநிதி, துரைமுருகனை அழைத்து கண்டித்ததாகவும், இதனால் மனமுடைந்த அவர் கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடன் தொகையை தராவிட்டால் கச்சா எண்ணை நிறுத்தப்படும்

## இந்தியாவை எச்சரிக்கிறது ஈரான்

(புதுடில்லி)

கச்சா எண்ணை இறக்குமதிக்கு இந்தியா பெரிதும் வீளைகுடா நாடுகளையே நம்பி உள்ளது.

சவூதி அரேபியாவிலிருந்து தான் அதிகமான அளவுக்கு கச்சா எண்ணை இந்தியாவுக்கு கிடைக்கிறது. அரேபியாவுக்கு அடுத்தபடியாக ஈரான் நாட்டில் இருந்து இந்தியாவுக்கு அதிகப்படியான கச்சா எண்ணை கிடைக்கிறது.

ஒவ்வொரு மாதமும் ஈரானில் இருந்து ஒரு கோடியே 20 லட்சம் பரல் கச்சா எண்ணை இந்தியா பெறுகிறது. அந்த வகையில் இந்தியாவின் ஒட்டு மொத்த கச்சா எண்ணை தேவையில் 12 சதவீதத்தை ஈரான் பூர்த்தி செய்கிறது.

இந்த கச்சா எண்ணைக்காக ஈரானுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை இந்தியா கொடுக்காமல் உள்ளது. 5 பில்லியன் டொலர் அளவுக்கு இந்தியா கடன் வைத்துள்ளது. இந்த கடன் தொகையை உடனே தர வேண்டும் என்று ஈரான் பல முறை கோரிக்கை விடுத்தது. ஆனால் இந்தியா சரியான பதில் அளிக்கவில்லை

இதையடுத்து ஓகஸ்ட. மாதம் முதல் கச்சா எண்ணை தர மாட்டோம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.

# பேச்சுவார்த்தையில் கடாபியின் பங்களிப்பு இருக்கக் கூடாது என்கிறது அமெரிக்கா

உலகச் செய்திகள்

லிபிய தலைவர் கேணல் முஅம்மர் கடாபியின் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது

கடாபி பதவி விலகுவதுடன், பேச்சுவார்த்தை களில் அவரின் பங்களிப்பு இருக்க கூடாதென இந்த சந்திப்பில் அமெரிக்கா வலியுறுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் முன்நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகளுக்கு லிபியா அரசாங்கம் ஒத் துழைப்பு வழங்கும் என அதன பேச்சாளர் ஒரு வர் கூறியுள்ளார்.

இதேவேளை பிரேகா நகரில் நிலைகொண்டிருந்த லிபிய அரச படை யினரை தாம் பின்வாங்கச் செய்துள்ளதாக லிபிய கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தனர்.

எனினும் இந்த தகவலை நிராகரித்த லிபிய அரசாங்கம், எண்ணெய் வளமிக்க பிரேகா நகர் தற்போதும் தமது கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறி யுள்ளது

# பாகிஸ்தான் பொலிஸாரை சுட்டுக்கொல்லும் நேரடிக்காட்சிகளை வெளியிட்டது தலிபான்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பொலிஸார் 16 பேரை சுட்டுக் கொல்லும் நேரடிக் காட்சிகளை தலிபான் தீவிர வாதிகள் வெளியிட்டுள்ளனர். பாகிஸ்தானை சேர்ந்த தலிபான் தீவிரவாதிகள் "லைவ்லீக்" என்ற இணையதளத்தில் நேற்றுமுன்தினம் வீடியோக் காட்சியை வெளியிட்டனர்.

அதில் பாகிஸ்தானைச் சேர்ந்த 16 பொலிசார் மலைப் பகுதியில் வரிசையாக நிறுத்தி வைக் கப்பட்டிருந்தனர். அவர்களின் கைகள் பின்புறமாக மடக்கி வைத்து கட்டப்பட்டிருந்தது. அவர்களின் முகம் பீதியில் உறைந்திருந்தது.

இந்த நிலையில் முகத்தை துணியால் மறைத் தபடி 4 தலிபான் தீவிரவாதிகள் அவர்கள் முன்பு துப்பாக்கியுடன் இருந்தனர். கடந்த 2 ஆண்டு களுக்கு முன்பு அவர்கள் சுவாத் பள்ளத்தாக்கில் 6 அப்பாவி குழந்தைகளைக் கொன்றதாக குற்றப பத்திரிகை வாசிக்கப்படுகிறது. அதற்குத் தண்டனை யாக அனைவரும் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் என தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து அவர்களை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு கொல்கின்றனர். துப்பாக்கி குண்டு பாய்ந்த பொலிசார் அப்படியே மண்ணில் சாய்கின்றனர். இந்த வீடியோக் காட்சிகள் ரத்தத்தை உறைய வைப்பதாக இருந்தது.

இந்தக் காட்சிகள் உண்மை. சுட்டுக்கொல்லப் பட்டது பொலிஸார் தான் என பாகிஸ்தான் இராணுவம் ஒப்புக்கொண்டது



தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனது 93 ஆவது பிறந்தநாளை தனது சொந்தக்கிராமமான கிழக்கு ஈஸ்டர்ன் கேப்பில் நேற்று முன் தினம் கேக் வெட்டி கொண்டாடுவதைக் காணலாம்.

# திபெத்தின் சுதந்திரத்தை அமெரிக்கா ஆதரிக்காது

(வொஷிங்டன்)

திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், திபெத் சுதந்திரத்தை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்க வில்லை என்றும் அந்நாடு தெரிவித்துள் ளது. சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி, திபெத் மதத்தலைவர் தலாய் லாமாவை, அமெரிக்க அதிபர் ஒபாமா சந்தித்து பேசினார். இதனால் அமெரிக்கா சீனா இடையே உரசல் ஏற்பட்டது. இந்நிலையில், சீனாவை சமாதானப்படுத்தும்வித மாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், திபெத் சுதந்திரத்தை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்க வில்லை என்றும் தெரிவித்துள்ளது. தலாய் லாமா ஒரு நோபல் பரிசு பெற்ற அறிஞர். திபெத் மதத்தலைவர். இந்த கண்ணோட்டத்திலேயே அவருடனான அமெரிக்க அதிபரின் சந்திப்பு இருந் ததாக அமெரிக்கா கூறியுள்ளது

# கோமா நிலையிலிருந்து மீண்டார் முபாரக்

(கெய்ரோ)

கோமா நிலையில் இருந்த எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு நினைவு திரும்பியுள்ளது. மக்கள் போராட்டத்தின் விளை வாக கடந்த பெப்ரவரி மாதம், எகிப்து ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவியிழந்தார்.

83 வயதாகும் அவர் மீது ஊழல், கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்கு விசாரணை அந் நாட்டு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்குகள் தொடர்பாக கடந்த ஏப்ரல் மாதம் போலிஸார் விசாரணை நடத்தியபோது மாரடைப்பு ஏற்பட்டு அவர் திடீரென மயங்கி விழுந்தார். உடனே அவரை அங்குள்ள 'ர்மெல்-ஷேக் மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த அவர்,கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென கோமா நிலைக்குச் சென்றார். உடனடியாக அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை அவருக்கு நினைவு திரும்பியது.

அவர் நலமாக இருப்பதாகவும், கோமா நிலை மீண்டும் ஏற்படும் வாய்ப்பு இல்லை எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.


# சோமாலிய வறட்சி குறித்து ஐ.நா. அவசரக் கூட்டம்

ஆபிரிக்க நாடுகளின் ஒன்றான சோமாலியா மிக கடுமையான வறட்சி நிலையை எட்டி உள் ளது. அந்த நாட்டைச் சேர்ந்த 15 இலட்சம் மக்கள் உயிர் பிழைக்க அருகாமையில் உள்ள நாடு களுக்கு ஓடி வந்துள்ளனர்.

சோமாலியாவின் வறட்சி குறித்து ஐக்கிய நாடுகள சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு அவசரக் கூட்டத்தை நடத்துகிறது. பிரான்சின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. இதனை பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் அலய்ன் ஜுபே தெரிவித்தார். இந்தக் கூட்டம் தற்போதைய பதவி முடிந்து செல் லும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு இயக்கு னர் ஜெனரல் ஜாக்குஸ் டியோப் தலைமையில் ரோமில் நடைபெறுகிறது.

அந்த கூட்டத்தில் சோமாலியாவுக்கு அளிக்கப் படும் சிறப்பு நிவாரண உதவி பற்றி அறிவிக்கப் படும். கடந்த 10 நாட்களுக்கு முன்பாக உலக உணவுத் திட்டம் மற்றும் சர்வதேச தொண்டு ஒக்ஸ் பாம் ஆகியவை உடனடி நிவாரண உதவி கோரி வேண்டுகோள் விடுத்தன.

சோமாலியா பிராந்தியத்தில் 1 கோடியே 20 லட்சம் மக்கள் பசி, பட்டினியால் வாடுகிறார்கள். அவர்கள் உயிருக்கு போராடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.



# குறள் சொல்லும் கதைகள் -50

இன்பத்துப் பால்

## உள்ளத்தில் வாழ்பவர்

தொலைபேசியில் மகனுடன் கதைத்து விட்டு வந்த வரதராசா மிகவும் சோகத்துடன் அமர்ந்திருந்தார். வெகுநேரமாக அவர் எதுவும் பேசவில்லை. வெகுநேரமாக பேசாமல் அமர்ந்திருக்கும் சகோத ரனைப் பார்த்துக்கொண்டிருந்த இலட்சுமி சொன்னாள்: "என்னண்ணா பேசாமல் யோசித்துக்கொண்டிருக்கிறியள். என்னென்று சொல்லுங்கோ."

வாய் திறவாது 'ம்' என்று விட்டு மீண்டும் யோசனையில் ஆழ்ந் தார்.. "என்ணெண்டு சொல்லுங்கோ. நீங்கள் யோசிப்பதைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கு" என்றாள் இலட்சுமி.

வரதராசாவின் கண்கள் கலங்கின. " அங்கஜன் வெளிநாட்டுக்கு ஒரு கருத்தரங்கிற்குப் போகப் போகிறானாம். திரும்பி வர ஆறு மாதங்கள் செல்லுமாம் அதனால் என்னை இங்கேயே இருக்கட்டாம்." என்றார்.

"இது சந்தோசப்பட வேண்டிய செய்தி தானே. ஏன்கவலைப்படு கிறீர்கள்? உங்களை நான் இராசா மாதிரிக் கவனிப்பன்" என்றாள் இலட்சுமி மகிழ்வுடன்.

"வரதராசா சொன்னதைக் கேட்டதும் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்தாள் வித்தியா. அவளது உதடுகள் நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதியின் நாமத்தை உச்சரித்தன. "இவ்வளவு நேரமும் அழுதாய் இப்ப மகிழ்ச்சி தானே. எதற்கும் அவசரப்படக்கூடாது என்று சொல்வார்கள்" என்று குசுகுசுத்தாள் அர்ச்சகா.

"பெரியதொரு பிரச்சினை நீங்கி விட்டது என்றாலும் ஆறுமாதங் களின் பின் திரும்பவும் வருந்தானே. அதற்குள் கஜேந்திரனுக்குச் சொல்லி ஆக வேண்டியதைக் கவனி: ஆறு மாதங்கள் கழிவது பெரிய விசயமல்ல. நாங்கள் நேற்று வந்த மாதிரி இருக்கு. இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன." என்றாள் அர்ச்சகா.

"அவருக்கு ஒரு தொழிலும் இல்லை. தகப்பன் கமக்காரன் ஒரேயொரு பிள்ளையென்றாலும் தொழில் இல்லாமல் என்னைத் திருமணம் செய்யத் தயங்குகிறார்." என்றாள் வித்தியா.

"உன்னுடைய பேச்சைக் கேட்கச் சிரிப்புத்தான் வருகிறது. தற்செயலாக அங்கஜன் வெளிநாட்டுக்குப் போகாவிட்டால் உனது நிலைமை நினைத்துப் பார் விடிந்தவுடன் புறப்பட வேணும். இதை எப்படி நீ கஜேந்திரனுக்குச் சொல்வாய். காதலிப்பவர்கள் பெண்களுக்குள்ள பிரச்சினைகளை உணரவேண்டும். ஆண்களுக்கு தப்புவதற்கு எத்தனையோ வழிகளிருக்கு ஆனால் பெண்கள் தப்ப எந்த வழியும் இல்லை. நீ விரும்பாத போது உன்னை வற்புறுத்தி விரும்பச் செய்தவர். இவற்றையெல்லாம் யோசித்திருக்க வேண்டும். இன்று நீ மாமா வருவதைப் பற்றியும், அங்கஜனை நீ திருமணம் செய்ய வேண்டிய நினையில் பற்றியும், கூறினனீ. அதைப் பெரிதாக எடுக்காமல் சிரித்துச் சமாளித்து விட்டார். உண்மையாக உன்னில் அவர் அன்பு கொண்டிருந்தால் இப்படிப் பொறுப்பில்லாமற் சொல்வாரா..? உன்னைப் பிரிந்து வாழ மாட்டேன் என்று கூறும் அவர் நாளைக்கு நீ கொழும்புக்குச் சென்றால் என்ன செய்வார்?,. உன்னால் அங்கஜனைத் திருமணம் செய்வதில் இருந்து தப்ப முடியாது. அப்படியிருக்க அதை வேடிக்கையாக நினைத்து விகடமாகப் பேசி உன்னைச் சமாதானப்படுத்தி அனுப்பிய கஜேந்திரன் உன் மீது அன்பு வைத்திருக்கிறார். என்று நீ எப்படி நம்புகிறாய்" ஆத்திரத்துடன் கேட்டாள் அர்ச்சகா.

வித்தியா சிரித்தாள். அதைப் பார்த்த அர்ச்சகாவுக்குக் கடுமையான கோபம் வந்தது. கொஞ்ச நேரத்திற்கு முன்பு விம்மி விம்மி அழுதாய். இப்ப முகம் மலர்ந்து சிரிக்கிறாய். நாளைக்குக் கொழும்புக்குச் செல்வதாக இருந்தால். சிரிப்பாயா..?" என்று கேட்டாள் அர்ச்சகா.

"அர்ச்சகா உனக்குக் கஜேந்திரனைப் பற்றி எதுவும் தெரியாது. அவர் எதையும் இலகுவாகத்தான் எடுப்பார் எனது நிலையைச் சொல்லி அனுப்பினால் எப்பாடு பட்டாவது வந்து அழைத்துச் சென்று விடுவார். அவர் எந்நேரமும் மகிழ்வுடன் எனது உள்ளத்துள் இருக்கிறார். அவரைப் பற்றிய எந்தத் தகவல்களும் தெரியாத நீ அவர் என்னிடம் அன்பில்லாதவர் என்றும் என்னைப் பிரிந்து வாழ்வார் என்றும் நினைக்கிறாய்" என்றாள் வித்தியா.

**கே.வி.குணசேகரம்.**

1130 உவந்து உறைவர் உள்ளத்துள் என்றும்
இகத்து உறைவர் உதிலர் என்னும் இவ்வூர்

காதலர் எப்பொழுதும் என் உள்ளத்துள் மகிழ்ந்திருக் கின்றனர். ஆனால் அதை அறியாமல் அவர் என்னைப் பிரிந்து வாழ்கின்றார். அவர் என் மீது அன்பில்லாதவர் என இவ் வூரவர் அவரைப் பழிக்கின்றனர்.

## இலங்கையருடன் சென்ற எண்ணைக் கப்பல் கடத்தல்

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலொன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்தியுள்ளதாக சோமாலியாவுக்கான ஐரோப்பிய ஒன்றிய கடற்படை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

எம்.வி. ஜூபா எக்ஸ்எக்ஸ் எனும் இக்கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டதாகவும் அதில் 16 ஊழியர்கள் இருந்ததாகவும் ஐரோப்பிய ஒன்றிய கடற்படை தெரிவித்துள்ளது.

இவர்களில் ஒரு இலங்கையர், 5 இந்தியர்கள், பங்களாதேஷ் நாட்டவர்கள் மூவர், சோமாலியர்கள் நால்வர், கென்யா, சூடான், மியன்மார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவர் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் அறுபது வீத வாக்காளரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லையாம்

## மாவட்ட அரச அதிபர் தகவல்



(கிளிநொச்சி)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக் களிப்பதற்கு தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் பெரும்பாலானோரிடம் தேசிய அடையாளஅட்டை இல்லை என்று மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 61,217 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள போதும், அவர்களில் 60 வீதமானவர்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இவர்களில் பலர் தமது சொந்த இடங்களை விட்டு வந்து குடியேறியவர்கள் என்றும், ஏனையோர் பலமுறை இடம் பெயர்ந்ததால் தமது அடையாள ஆவணங்களை தொலைத்தவர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அடையாள அட்டைகளை இழந்துள்ள இவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்க தமது செயலம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கஅதிபர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தற்காலிக அடையாளஅட்டையைப் பெறமுடியும் என்றபோதும், பெரும்பாலானோர் அதற்கு விண்ணப்பிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்காலிக அடையாள அட்டையை பெறுவதற்கு ஒளிப்படம் எடுப்பதற்கும், பேருந்துச் செலவுக்கும் 400 ரூபா தேவை என்றும் அந்தப் பணத்துக்கு தாம் எங்கே போவது என்றும் வாக்காளர்கள் கேள்வி எழுப்புவதாகவும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் மேலும் கூறியுள்ளார்

## தமிழ் மொழி பேசக் கூடியவர்கள் பொது நிர்வாக சேவைக்குள்

தமிழ்மொழியை பேசக் கூடியவர்களை தேவையான வகையில் பொது நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான யோசனையொன்றை அரசாங்கத்திடம் முன்வைக்கவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன்பொருட்டு, பொது நிர்வாக சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

## வீட்டிலுள்ளவர்கள் கூச்சலிட்டதால் சங்கிலி திருட வந்தவர்கள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மல்லாகம் பகுதியிலுள்ள வீடொன்றினுள் இரவுவேளையில் நுழைந்த திருடர்கள் இருவர் கத்தியைக் காட்டி சங்கிலியை அறுக்க முற்பட்டபோது வீட்டிலுள்ளவர்கள் கூச்சலிட்டதைத் தொடர்ந்து அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

மல்லாகம் தொந்தனை வீதியில் கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணி யளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீட்டிலுள்ளவர்கள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வேளையில், தமது முகத்தை மறைத்தபடி கத்திகள் மற்றும் பொல்லுகள் சகிதம் வீட்டினுள் நுழைந்த இரு திருடர்கள் கத்தியை காட்டி அச்சுறுத்தி சங்கிலியை அறுக்க முற்பட்டபோது, வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டனர். கூச்சல் சத்தம் கேட்டு. ஓடி வந்த அயவர்களையும் வீட்டிலிருந்த தந்தையையும் தாக்கிவிட்டு இரு திருடர்களும் தப்பியோடியுள்ளனர்.

தந்தை காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெல்லிப்பளை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கூட்டமைப்பு வேட்பாளர் திருக்கோவிலில் கைது

திருக்கோவில் பிரதேசத்தில் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவர் உட்பட நான்கு பேரை கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு கைது செய்ததாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த ஜெயசூரிய தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருககோவில் பிரதேச சபைக்கான வேட்பாளர் பேரம்பலம் விஜயராஜா (வீரா) என்பவரும் அவரது ஆதரவாளர்கள் உட்பட நான்கு பேருமே சம்பவதினம் நள்ளிரவு 12.15 மணியளவில் திருக்கோவில் பிரதான நகர்ப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிரசார சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகத்துக்கான காலக்கெடு முடிவடைந்துள்ள நிலையில் பிரசார சுவரொட்டிகளை ஒட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## இருதய நோயாளர்களின் எண்ணிக்கை அனுராதபுரம் வைத்தியசாலையில் உயர்வு

(அனுராதபுரம்)

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில், தங்கியிருந்து சிகிச்சைபெற்றுக் கொண்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 10 வருடங்களுக்குள் வெகுவாக உயர்ந்துள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அனுராதபுரம் வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்த விடயம் தெரியவந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்தது

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வசதிகள் மேம்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத்தவிர வைத்தியசாலையின் ஏனைய சிகிச்சைப் பிரிவுகளுக்கும் வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் 75 வீதத்தால் உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அனுராபுரம் வைத்தியசாலையின் வெளிநோயாளர்கள் சிகிச்சைப் பிரிவுக்கு வருகைதந்த நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 10 வருடங்களில் 74 வீதத்தால் குறைவடைந்துள்ளது

## தேசிய ரீதியில் முதலிடம்





(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டியில் காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலய மாணவி ஆர்.சனூஜா பேச்சுப் போட்டியில் பிரிவு 01 இல் தங்கப் பதக்கத்தினை வென்றார்.

இச்சாதனையானது பாடசாலைக்கு வரலாற்றிலே ஒரு மைல் கல்லென அதிபர், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்மாணவியைப் பாராட்டி கெளரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் எஸ்.யோகராஜா தலைமையில் நடைபெற்றது. இதன் போது காரைதீவு கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.வேதாசலம், கல்முனை வலயக் கல்வி அலுவலக தமிழ் மொழிப்பாட சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி. ஆர்.வரதராஜன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு மாணவியைப் பாராட்டி கெளரவித்தனர்.

## குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உதவி மன்னார் பொலிஸாருக்கு கருத்தரங்கு



(மன்னார்)

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு "குற்றத்தால் பாதிக்கப்படோருக்கான உதவியும் பாதுகாப்பும்" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் நிசனங்க உடுலாகம சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி பி.குமார ரட்ணம், சட்டத்தரணி சஜிவாணி அபயக்கோண் மற்றும் மன்னார் மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவின் பணிப்பாளர் இ.சி.பெல்டானோ ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எச்.எப்.கொடிதுவக்கு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த சமரசேகர மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஷான் தளுவத்த உள்ளடங்கலாக மன்னார் மாவட்டத்தில் கடமை புரியும் சுமார் 150 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

## கமநலசேவை நிலையம் அம்பனில் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் அம்பன் பகுதியில் கமநல சேவைகள் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் தலைமையில் நேற்று முன்தினம் இது தொடரபிலான நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்குடா நாட்டில் விவசாயிகளின் நலன் கருதி எட்டு கமநல சேவை நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. அத்துடன் அழிவடைந்துள்ள அனைத்து கமநல சேவைகள் நிலையங்களையும் புனரமைப்பதற்கு கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அம்பன் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கமநல சேவைகள் நிலையத்திற்கான நிர்மாணப்பணிகளுக்காக 60 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கான விதைநெல் மற்றும் உர விநியோகம், ஆலோசனைகள் வழங்கல் உள்ளிட்ட சேவைகள் இந்த நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் எஸ்.எம் சந்திரசேன வடமாகாண ஆளுனர் மேஜர ஜெனரல் ஜீ.எ.சந்திரசிறி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோப்பாய் நாவலர் வித்தியாலய கட்டடத்தை ஜனாதிபதி நேற்று திறந்து வைத்தார்



ஊவா மாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் படையினரினால் நிர்மாணிக்கப்பட்ட கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடத்தை நேற்று முற்பகல ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் வைபவரீதியாகத் திறந்துவைத்தார்.

நேற்றுப் பிற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் வித்தியாலயத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி அவர்கள் வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தின் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார். தொடர்ந்து மாணவர்களின் பாண்ட வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுபபினர்கள் சகிதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்டடத்திற்கான நினைவுக்கல்லைத் திரைநீக்கம் செய்துவைத்ததுடன் கட்டடத்தையும் திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி அவர்கள் ஊவாமாகாணசபை முதலமைச்சர் சுவீந்திர ராஜபக்ஷ, அமைச்சர் பவித்திரா வன்னியாராடசி, அமைச்சர்கள் சந்திரசேன, பிரதியமைச்சர்கள் ரோகித அபய குணவர்த்தன வட மாகாண ஆளுநர், ஊவா மாகாண ஆளுநர் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய, யாழ் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க, வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமை ச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்விற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தொடர்ந்து ஊவாமா காண முதலமைச்சர், படைத்தளபதிகள் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து ஜனாதிபதி அவர்களுக்கு நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் நினைவுப் பரிசு ஒன்றை வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்வைத் தொடர்ந்து கோப்பாய் நாவலர் விதத்தியாலயத்தின் கட்டட நிர்மானப் பணிகளில் ஈடுபட்ட இராணுவத் தினரிற்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இக்கட்டடம் ஊவா மாகாணசபையின் நிதியின் மூலமும் படையினரினால் நிர்மாணிக்கப்பட்டிருபபது குறிப்பிடத்தக்கது (பா)

## கடந்த காலத்தின்...

உடனடியாக இணங்கியிருக்கின்றார். உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தாலென்ன மக்களது நாளாந்த பிரச்சினைகளாக இருந்தாலென்ன அவருடன் எந்நேரமும் தொடர்புகொள்ள முடியும். மக்களுக்குக் கொடுககப்பட்ட வாக்குறுதிகளையும் நிறைவேற்றமுடியும் எனவும் தெரிவித்த அமைச்சர், வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல் சந்தர்ப்பத்தை மக்கள் சரிவரப்பயன் படுததிக்கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (பா)

## மக்களை அழியவிட்டு...

உணவும், உடையும் கொடுத்து அவர்களது வயிறறுப்பசியையும், மானத்தையும் காப்பாற்றுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அப்போது ஓமந்தையில் நின்றிருந்த என்னிடம் தொலைபேசி மூலம தெரிவித்ததை அடுத்து அவர்களுக்கு உணவும், ஆடையும் கொடுத்து அவர்களை அழைத்துவந்தோம்

இது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராஜாவுக்கோ, சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கோ தெரிந்திருக்க நியாயம் இல்லை. அப்போது அவர்கள் அவுஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் சொகுசு வாழ்க்கையில் திளைத்திருந்தார்கள். இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கம் சேலை வழங்கியது, உணவு வழங்கியது எல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி, இங்கு போர் இடம்பெற்றபோது, தமது பிள்ளைகளை வெளிநாடுகளில் உயர் படிப்புக்களை மேற்கொள்ள வைத்துவிட்டுத் தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியே கனவு கண்டவர்கள் இவர்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவானநதாவைப் பொறுத்தவரையில் அவர் அன்றும் இன்றும் என்றும் ஒரே கொள்கையில் நின்று தமிழ் மக்களினதும் சுயநிர்ணய உரிமையையும், அவர்களது அபிவிருத்தியையும் ஜனாதிபதி மகிந்தவின் அரசு மூலம் வென்றெடுக்க முடியும் என்று நம்புபர். அவர் கஷ்டங்கள், துன்பங்கள் வந்த போதெல்லாம் உங்களுடனே வாழ்ந்து வந்த தலைவர் என்பதை மறந்துவிடக்கூடாது என்று அமைச்சர் ரிசாட் கூறினார்.

## டக்ளஸ் மனிதன்...

நேற்றைய தினம் கோப்பாயில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் போன்று சிறந்த தலைவர் எமது மக்களுக்கு கிடைத்தது பெரும் பாக்கியமே என்பதுடன் அவர் போன்ற சிறந்த தமிழ்த் தலைவர் ஒருவரை இனிமேல் காண முடியாது என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

10 வருடங்களுக்கு முன்னர் இப்படி இப்படித்தான் நடக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தீர்க்க தரிசனமாக சொன்னவைகள் எல்லாம் நடந்து முடிந்துள்ளதுடன் தற்போது நடைபெற்றும் வருகின்றன.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக ஒருவர் பேசும்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதன் அல்ல என்று குறிப்பிட்டிருந்தார். அவர் கூறியது முற்றிலும் உண்மை. ஏனெனில் நிச்சயமாக அவர் மனிதனே அல்ல; வடமாகாண மக்களின் கடவுளாகவே திகழ்ந்து, இப்பகுதி மக்களை வாழவைப்பதில் கவனம் செலுத்தி வருகின்றார் என்றார்.

## தமிழ் மக்கள்...

அழிவுகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பே காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பினர் 22 நாடாளுமன்ற உறுப்புரிமையை கொண்டிருந்த போதுதான் வன்னியை நோக்கிய படைநகர்வை ஆரம்பிக்க அரசு எண்ணியிருந்தது. பேசித் தீர்ப்பதற்கான கதவுகள் அனைத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இறுக மூடிவைத்திருந்த போதுதான் அந்த படைநகர்வு ஆரம்பித்திருந்தது.

அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழத் தேசியக் கூட்டமைப்பை சந்தித்து பல தடவைகள் பேசியிருந்தார். யுத்தம் கொடியது. அது தனது கோரத்தை காட்டப்போகின்றது. எமது மக்களை அழித்து வதைக்க போகிறது. வாருங்கள் அரசாங்கத்துடன் பேசி இந்த யுத்தத்தை நிறுத்துவோம் என்றும் அதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் கூட்டமைப்பை சந்தித்து கேட்டிருந்தார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த கோரிக்கையை நிராகரித்தது. அந்த கோரிக்கையை கூட்டமைப்பினர் ஏற்று நடந்திருந்தால் அழிவுகள் நடந்திருககாது. இதை அவர் கூறி வரும்போது, ஏதோ சில ஊடகங்களில் வெளிவந்த தவறான செய்திகளின் தவறான மொழி பெயர்ப்பை வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வன்னியில் அழிவுகளே நடக்கவில்லை என்று கூறியதாக பொய்யான வதந்திகளை கூட்டமைப்பினர் பரப்பி வருகின்றார்கள்.

மலையகத்திலும் கொழும்பிலும் மக்களால் நிராகரிக்கப்பட்ட மனோ கணேசன் கூட இப்போது எமது தலைவர் மீது சேறு பூச முற்படுகின்றார். அண்ணன் இராவணனின் அதர்மத்தை உணர்ந்த விபீடணன் தர்மத்தின் பக்கம் மாறியிருந்தது போல் அண்ணன் மனோ கணேசனின் தவறான பாதையை உணர்ந்துதான் தம்பி பிரபா கணேசன் நீதியான பக்கம் திரும்பி, இப்போ அவரும் இந்த மேடையில் இருக்கின்றார். எமது மக்களின் அழிவை தடுக்கவும் கூட்டமைப்பினர் முன்வந்திருக்கவில்லை.

அழிவில் இருந்து தப்பித்து வந்த எமது மக்களின் துயர் துடைக்கவும் அவர்கள் முன்வந்திருக்கவில்லை. எமது மக்களின் துயர் துடைத்தவர் அமைச்சர் டக்ளஸ் மட்டுமே. உணர்ச்சி பொங்க உரிமை பற்றி பேசிவரும் மாவை சேனாதிராஜாவும்,

(சுப்ரா) சரவணபவனும் அரசாங்கத்தின் பின் கதவு தட்டி அரச உயர் மட்டத்திடம் குனிந்து வளைந்து கூனிக்குறுகி தமது பிள்ளைகளை மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இவர்களா உங்களுக்கு உரிமை பெற்று தரப்போகின்றார்கள்? என்றும் அங்கு கேள்வி எழுப்பினார் விந்தன்.

# துணுக்காய் வலயத்தில் முன்மாதிரிப் பாடசாலை தெரிவு

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு தண்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை துணுக்காய் கல்வி வலயத்தில் முன்மாதிரிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலையான இப்பாடசாலை முன்மாதிரிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பௌதீக வளங்கள் இப் பாடசாலைக்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலுள்ள உறவுகள், உள்நாட்டிலுள்ளவர்களின் உதவியுடன் இப்பாடசாலை முன்மாதிரப் பாடசாலையாக உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

# தங்கச் சங்கிலி திருட்டு சந்தேகநபருக்கு பிணை

(சாவகச்சேரி)

தங்கச் சங்கிலி அறுத்த சுரசாலை வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக அதே ஊரைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டை அடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து நேற்று செவ்வாய்க்கிமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நிறுத்தினர். குற்றம் சாட்டப்பட்ட நபரை, நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா ஆட்பிணை, காசுப்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் மேலும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் சாவகச்சேரி பொலிஸ நிலையத்தில் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார். (11)

# எழுதுமட்டுவாளில் மீள் குடியமர்வு பொதுமக்களுக்கு அழைப்பு

(பளை)

எழுதுமட்டுவாள் வடக்கு மீள் குடியேற்ற நிகழ்வு இன்று காலை 11 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் மீள்குடியேறவுள்ள அப்பிரதேச மக்களைக் காலை 10.30 மணிக்கு எழுதுமட்டுவாள் சந் தியில் ஒன்று கூறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (11)

# பொருளாதாரத்தை அழிக்க ஐ.தே. கட்சி கூட்டுச்சதி

(கொழும்பு)


கட்டுநாயக்க பகுதியில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் தவறுதலாக இடம்பெற்றது என பொதுசன உறவுகள் மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், பத்திரிகையாளர்கள், பொலிஸாரை எவ்வளவு தூற்றி எழுதினாலும் பொதுமக்களுக்கு பொலிஸார் இன்றி வாழ முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியும் நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கும் நோக்குடனேயே கட்டுநாயக்க சம்பவத்தை பெரிதுபடுத்தி போராட்டங்களை முன்னெடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

## செய்திப்பாணம்

**சலுகைகளைப் பெறுவது சனங்களல்ல, மக்களை உலுக்கிவிட் டெடுக்கின்ற உறுப்புரிமை - வலுவாக பின்கதவால் நுழைந்து பிள்ளைகளை எம்பீக்கள் முன்னுக்குக் கொணர்வதே முனை!**



# ஜனாதிபதி மகிந்தவுக்கு தென்மராட்சியில் அமோக வரவேற்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தென்மராட்சி பகுதி மக்களால் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்ட மைதானத்திற்கு வரும் வழியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் வரவேற்று கூட்ட மேடைக்கு அழைத்து வந்தார்கள்.


பொதுமக்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஜனாதிபதி தனது இரு கரங்களையும் அசைத்து மக்களுக்கு தமிழில் தனது வணக்கத்தைக் கூறினார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் விந்தன், தமிழ்க் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், பிரதமர் டி.எம்.ஜெயரட்ன, அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், டிலான் பெரேரா திஸ்ஸ கரலியத்த, சந்திரசேன, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர். மாலினி பொன்சேகாவும் சமூகம் கொடுத்திருந்தார்.

இக்கூட்டத்தில் அங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழில் உரையாற்றினார். (எஸ்)

# அரசிடம் கையேந்துவோர் துரோகிகள்

## சுன்னாகத்தில் அரியநேத்திரன் சீற்றம்



யாழ்ப்பாணத்தில் கடந்த பொதுத்தேர்தலில் சிங்களப் பேரினவாதக் கட்சியைச் சேர்ந்த நான்கு பேரை யாழ்ப்பாண மக்கள் தெரிவு செய்தமை அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டிய காரியம். இத்தகைய வெட்ககேடான காரியத்தை யாழ்ப்பாண மக்கள் செய்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலுள்ள "நாய்கள்" கூட தமிழ் உணர்வு மிக்கவை. அவை அரசு போடும் எலும்புத் துண்டுகளைக் கௌவிச் செல்வதில்லை. அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் சுயலாபங்களுக்காகவும் அரசிடம் கையேந்துபவர்கள் துரோகிகள்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சுன்னாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல்' பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது ஆக்ரோசமுடன் தெரிவித்தார்.

அகிம்சைப் போராட்ட, ஆயுதப் போராட்ட தலைமைகளை தமிழினத்திற்கு தந்த யாழ்ப்பாண புனித மண்ணில் பேரினவாதிகளுக்கு இடம்கொடுக்க கூடாது என்றும், தன்மானத்தை வெளிப்படுத்தி தமிழ்த் தேசியத்தை நிலைநாட்டுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

முள்ளிவாய்க்காலில் பலியான எமது உறவுகளின் ஆத்மா சாந்தியடைவதற்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வறிய குடும்பங்களுக்கு மலசலகூடம்

## நல்லூர் பிரதேசத்தில் ஏற்பாடு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வறிய மக்களுக்கு 500 மலசலகூடங்கள் பொருளாதார அமைச்சின் நிதியுதவியுடன் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதில் 300 மலசலகூடங்கள் இலவசமாக புதிதாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட ஜே/89, ஜே/90 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் மீதமான 200 மலசலகூடங்களும் முன்னுரிமை அடிப்படையில் ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 50 வீத மீள் அறவீட்டுடன் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. (26)



திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திவிநெகும பயனாளிகளுக்கான வீட்டுத்தோட்ட விதைபொருட்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா, ஈ.பி.டி.பி நல்லூர் தொகுதி அமைப்பாளரும் வேட்பாளருமான அ.இரவீந்திரதாசன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் ஆகியோர் பயனாளிகளுக்கான உதவு பொருட்கள் வழங்குகின்றனர். (26)

# யாழில் வாக்காளர் அட்டை விநியோகம் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எதுவித முறைப்பாடும் இன்றி வாக்காளர்களுக்கு இம்முறை விநியோகித்து முடித்ததாக யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமையுடன் விநியோகித்து முடிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் அந்தந்த தபால் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கென தபால் நிலையங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (வி)

# இந்திய மருத்துவர்கள் இலங்கையில் போர்க்கொடி தூக்கும் தொழில்சங்கம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் பணியாற்ற இந்தியாவில் இருந்து 100 மருத்துவ பயிற்சியாளர்களை அனுமதிக்கும் முடிவுக்கு இலங்கை டாக்டர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தேவையான தகுதிகள் இல்லாத 100 இற்கும் மேற்பட்ட இந்திய டாக்டர்களை அனுமதிக்கும் இலங்கை மருத்துவக் கவுன்சில் மற்றும் சுகாதாரத் துறையின் மேலாண் இயக்குநர் ஆகியோரின் முடிவால் பாதிப்படைந்துள்ளோம் என்று டாக்டர்கள் சங்கமான அரசு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் மூத்த அலுவலர் உபுல் குணசேகர தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் போராட்டம் நடத்துவது குறித்து அரசு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழு கூடி முடிவெடுக்கும் என்று குணசேகர குறிப்பிட்டார்.



யாழில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும் இசைக்குழு, யாழில் புது உதயம் என்னும் இசை நிகழ்ச்சியை திருநெல்வேலிச் சந்தியில் வழங்கியிருந்த வேளை...

## யுத்தத்தால் சிதைவடைந்த சுகாதார நிலையங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட பகுதிகளில் 66 சுகாதார நிறுவனங்களையும் நாட்டின் பிறபகுதிகளில் 25 நிறுவனங்களையும் புனரமைத்து மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யுத்த சூழலினால் மருந்தகங்கள், மாவட்ட வைத்திய சாலைகள் மற்றும் சுகாதர கண்காணிப்பு பிரிவு என்பன செயலிழந்து காணப்பட்டு வந்ததாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## தேர்தல் வன்முறை இதுவரை 96 பேர் கைது

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இடம்பெற்ற தேர்தல் வன்முறையுடன் தொடர்புபட்ட 96 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இதுவரை 70 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்டத்துக்கு விரோதமாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 22 அரச வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# புனித யாகப்பர் ஆலய மலர் வெளியீடு இன்று

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஞாபகார்த்த மலர் வெளியீடு நாளை பி.ப 3.00 மணிக்கு ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ்.நேசராஜா அடிகளார் தலைமையில் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜி.ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்துகொள்ளவுடன், நூலின் முதற்பிரதியை அருள் கலாநிதி யோ.ஏ.ஜெயசீலன் அடிகளார் பெற்றுக்கொள்வார். (52)

# பெற்றோல் இறக்குமதியில் மோசடி விசாரணை செய்ய தெரிவுக்குழு வேண்டும்

### ஐ.தே.கட்சி பிரேரணை

(கொழும்பு)

தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி மற்றும் அது தொடர்பிலான சர்ச்சைக்குரிய ஒப்பந்தம் தொடர்பில் விசாரணை நடத்த இருவேறு நாடாளுமன்ற தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஒன்றினை ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றில் சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையொப்பம் இட்ட இப்பிரேரணையை எதிர்க்கட்சி பிரதம கொரடா ஜோன் அமரதுங்க நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

# ஊடகவியலாளரை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

ஊடகவியலாளரான சுதர்மன் ரதலியகொடவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான், கொழும்பு மோசடி புலனாய்வு பணியகத்துக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா ரெலிகொமிடமிருந்து 1828 தொன் கழிவு இரும்பை கொள்வனவு செய்வதற்கு உதவும் வகையில் போலி ஆவணங்களை தயாரித்து இரண்டு வர்த்தகர்களுக்கு வழங்கியதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.